புலைச்சி



...த்ரநாத் டாகூர்

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4

ஆனந்த மடம்

வங்க மூலத்திலிருந்து

த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ., அவர்கள்

மிக்க அழகாய் மொழிபெயர்த்தது.

—— ரூ. 2—8—0 ——

மதிப்புரைகளிற் சில

தனவணிகன்: தமிழ் மக்கள் அவசியம் படிக்கவேண்டிய நூல்களுள் இது ஒன்று. மொழிபெயர்ப்பு அருமையாய் இருக்கிறது. கன்கவர் முறையில் அமைந்த புத்தகம்.

கலாசேவகி: சொல் அமைப்பு இலகுவாயும், கற்பனை வெகு நேர்த்தியாயும், கதைப்போக்கு விருவிருப்பாயும் இருக்கின்றன.

நவசக்தி: இந்தியாவுக்குச் சுதந்திர உணர்ச்சி ஊட்டியது ஆனந்த மடம். மொழிபெயர்ப்பு நன்ருயிருக்கிறது.

ஹனுமான்: இக் கதையின் போக்கே நூதன வசீகரம் படைத்தது. தேசீய ஆவேசத்தை ஊட்டும் இந்த நவீனத்தைப் படிக்கும்போது, ஒரு கதையைப் படிப்பதுபோன்ற உணர்ச்சியே நமக்கு ஏற்படவில்லை. மொழிபெயர்ப்பு என்ற எண்ணமும் நமக்கு உண்டாகவில்லை. எளிய லலிதமான தமிழ் நடை. உயர்ந்த நாவல், நல்ல மொழிபெயர்ப்பு.

மணிக்கொடி: பங்கிம் பாபுவின் மூலத்திலுள்ள வேகம் பூராவையும் கொண்டுவந்திருக்கிருர். அழகான வர்ணனைகளை நன்ருக மொழிபெயர்த்திருக்கிருர்.

கலைமகள்: வர்ணனைகள் எல்லாம் தத்ரூபமாகக் கண் முன் வந்து நிற்கின்றன. இயற்கை வர்ணனைகளை அநாயாசமாகப் படம் பிடித்துக் காட்டுகிருர். அரண்யத்தின் காட்சிகள், பஞ்சத்தின் கொடுமை, ஆனந்த மடம், சந்தானர்களின் போர் முதலியவை உயர்ந்த சித்திரங்கள்.

புலிச்சி

பங்கிம் சந்திரர்

அரிய நாவல்கள்

1. ஆனந்த மடம்
2. விஷ விருக்ஷம்
3. துர்க்கேசநந்தினி
4. தேவி சௌதுராணி
5. மாதங்கினி
6. இந்திரா
7. ரஜனி
8. ஹிரண்மயி
9. ராதாராணி
10. கபால குண்டலா
11. கிருஷ்ண காந்தன் உயில்
12. சீதாராம்
13. ராஜஸிம்ஹன்
14. மிருணாளினி

சரத் சந்திரர்

அரிய நாவல்கள்

1. விஜயா
2. தேவதாஸ்
3. வைகுந்தன் உயில்
4. லலிதா
5. அமூல்யன்
6. ஸௌதாமினி
7. சந்திரநாத்
8. இருளில் ஒளி
9. அனுபமா
10. ஹேமநளினி
11. ஹேமாங்கினி
12. இந்துமதி
13. சரத் சந்திரர் கதைகள்
14. காசிநாதன்

புலைச்சி

(சண்டாளிகா)

ரவீந்திரநாத் டாகுர்

மூல வங்காளியிலிருந்து
த. நா. குமாரஸ்வாமி
மொழிபெயர்த்தது

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை - 4

காபிரைட்] 1947 [விலை ரூ. 1 - 0 - 0

விசுவபாரதியின்
விசேஷ
அனுமதி பெற்றது.

அல்லயன்ஸ் பிரஸ்
சென்னை-4
நெ. 109, ஏப்ரல்-1947

முன்னுரை

ராஜேந்திரலால் மித்ரர் அவர்கள் ஆராய்ந்த நேபாலி பௌத்த இலக்கியத்தில் சார்தூலகர்ணவதானத்தின் சுருக்கமான விவரம் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் உள்ளதுதான் இந்த நாடகத்தின் கதை அமைப்பு.

இக்கதை நடைபெற்ற இடம் ச்ராவஸ்தி. புத்த பிரான் அச்சமயம் அநாதபிண்டர்களின் உத்யானத்தில் தங்கி இருந்தார். ஒரு ஸம்ஸாரி வீட்டில் உண்டுவிட்டு விஹாரத்துக்குத் திரும்பும் சமயம் அவருடைய பிரிய சிஷ்யனான ஆனந்தனுக்கு. தாகம் உண்டாயிற்று. ஒரு சண்டாளப்பெண் - அவள் பெயர் பிரகிருதி, - கிணற்றி லிருந்து ஜலம் தூக்கிக்கொண்டிருந்தாள். அவளிடம் குடிக்கத் தண்ணீர் கேட்டான். அவளும் கொடுத்தாள். அவனுடைய வசீகரத்தோற்றத்தைக் கண்டு சண்டாளப் பெண் சொக்கிப் போனாள். அவனைப் பெற ஒரு வழியும் இன்றித் தாயின் உதவியை நாடினாள். அவளுடைய தாய்க்கு வசியம் தெரியும். தாய் முற்றத்தைச் சாணத் தால் மெழுகி ஒரு மேடை எழுப்பி அங்கே நெருப்பை மூட்டி மந்திரோச்சாடனம் செய்துகொண்டே 108 எருக் கம் பூக்களை ஒவ்வொன்றாக அந்த அக்கினியில் இட்டாள். ஆனந்தனால் இந்த மந்த்ர சக்தியைத் தடுக்க முடியவில்லை. இரவு அவளுடைய குடிசைக்கு வந்துசேர்ந்தான். பீடத் தின்மேல் உட்கார்ந்து இருந்தான். பிரகிருதி அவனுக் காகப் படுக்கை விரித்துக்கொண்டிருந்தாள். ஆனந்தனின்

உள்ளத்தில் கவலை மூண்டது. தன்னைக் காப்பாற்றும் படி பகவானை நோக்கி அழுதுகொண்டே பிரார்த்தனை செய்தான்.

பகவான் புத்தர் ஆனந்தன் மந்த்ரசக்தியால் கட்டுண்டு தவிப்பதை அறிந்து ஒரு பௌத்த மந்திரத்தை ஜபித்தார். அதன் வன்மையால் புலைச்சியின் வசிய வித்தை வலிமை இழந்தது. ஆனந்தனும் மடத்துள் அடைக்கலம் புகுந்தான்.

புலைச்சி

(சண்டாளிகா)

முதல் காட்சி

தாய்

பிரகிருதி, அடியே பிரகிருதி! எங்கே போய் விட்டாள்? என்ன நேர்ந்ததோ தெரியவில்லையே! வீட்டில் காணவே காணோமே.

(பிரகிருதி வருகிறாள்)

பிரகிருதி

ஏன், அம்மா? இங்கேதானே இருக்கிறேன்!

தாய்

எங்கேயடீ?

பிரகிருதி

இதோ, கிணற்றின் கரையில்தான், அம்மா.

தாய்

ஆச்சரியமாக இருக்கிறதே! மத்தியான வேளை ஆகிறது. மண்டை வெடிக்கிற வெயில்; தரை பற்றி

எரிகிறது; கால் வைக்க முடியவில்லை. வீட்டில் ஜலம் எப்போதோ எடுத்து வைத்தாயிற்று. ஊர்ப் பெண்களெல்லாம் ஜலம் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். வெயில் தாளாது காகம் வாயைத் திறந்துகொண்டு அந்த நெல்லி மரத்தின் கிளையில் உட்கார்ந்திருக்கிறது பார். வேறு வேலை இல்லாமல் கத்திரி வெயிலை உட்கார்ந்து அனுபவிக்கிருயாக்கும்! உமா வீட்டை விட்டு வெளியே வெயிலில் உலர்ந்துகொண்டு தவம் செய்தாளென்று புராணக்கதை கேட்டிருக்கிறேன்! உனக்கென்னடீ வந்தது?

பிரகிருதி

ஆமாம், அம்மா; தவம்தான் செய்கிறேன்.

தாய்

அதிசயமாக இருக்கிறதே! யாருக்காகடீ?

பிரகிருதி

என்னைக் கூப்பிட்டாரே, அவருக்காகத்தான்.

யார் என்னை அழைத்தாரோ?
என்னை அழைத்தது யாரோ?
பேச அறியாத என்னைப் பேசவைத்தாரே அவர்
ஏழையின் பெயரைக் கண்டு கொண்டாரே யாரோ அவர்?
ஓஹோ! என் உள்ளத்தில் வந்து அவர்
என்றுமே பதியாரோ?

தாய்

எதற்காகடீ கூப்பிட்டார்?

பிரகிருதி

'குடிக்க ஜலம் தா' என்று என் உள்ளம் ஒலிக்கும்படி சொன்ஞர்.

தாய்

அட தலையெழுத்தே! ‘ஜலம் தா’ என்று உன்னிடமா கேட்டார்? யாரடி அவர்? நம் ஜாதியைச் சேர்ந்தவரா?

பிரகிருதி

அப்படித்தான் சொன்னார் - தாமும் இந்த ஜாதிதான் என்றார்.

தாய்

உன் ஜாதியை ஒளிக்கவில்லையே நீ? சண்டாளப் பெண் என்று சொன்னயா?

பிரகிருதி

சொன்னேன். அவர், ‘பொய்’ என்றார். ‘ஆவணி மாதத்தின் கருமுகிலிற்குச் சண்டாளன் என்று பெயர் இட்டதனால் அதன் உயர்வு குறைந்து போகுமா; அதன் நீர் சுவையற்றதாகுமா; இழிவாக உன்னையே நினைத்துக் கொள்ளாதே! ஆத்ம ஹத்தியைவிட ஆத்மநிந்தை மகா பாபகரமானது?’ என்றார் அவர்.

தாய்

என்னவெல்லாமோ சொல்கிறயே! பூர்வஜன்ம விஷயம் ஏதாவது உனக்கு நினைவுக்கு வருகிறதா என்ன?

பிரகிருதி

நான் இன்று எடுத்த புது ஜன்மத்தின் கதைதான், அம்மா, இது.

தாய்

சிரிப்பாக இருக்கிறது. புது ஜன்மமா? எப்போதடீ எடுத்தாய், புது ஜன்மம்?

பிரகிருதி

அன்று மத்தியான வேளை. ராஜாவீட்டில் மணி அடித்தது. பதை பதைக்கிற வெயில். தாயற்ற கன்றைக் கிணற்று நீரில் குளிப்பாட்டிக் கொண்டிருந்தேன். அந்தச் சமயம் என்முன் நின்ருர், சீவர ஆடை உடுத்திய அந்தப் புத்த பிக்ஷு. 'குடிக்க ஜலம் தா' என்று கேட்டார். திடுக்கிட்டது என் உள்ளம்; புல்லரித்தது என் உடல். தூரத்தில் நின்றவாறே அவரை வணங்கினேன். காலை ஒளி போன்ற தூய மேனியர். 'நான் ஒரு சண்டாளப் பெண். கிணற்று நீர் அசுத்தமாயிற்றே' என்றேன். அவர் என்ன சொன்ஞர் — 'என்னைப்போல் நீயும் ஒரு மனிதஜன்மந் தானே! வெயிலின் கொடுமையை அகற்றுகிறது ஜலம் - தாகத்தையும் போக்கவல்லது' என்ருர். அன்று முதல் தடவையாகக் கேட்டேன், இந்தமாதிரிப் பேச்சை! அன்றுதான் முதல் தடவையாகக் கொடுத்தேன், ஒரு கையளவு தண்ணீர். அவர் காலின் ஒரு தூசியைத்தொட நடுங்கியது, அம்மா, என் உள்ளம்.

தாய்

அடி மூடமே! எங்கிருந்தடீ இவ்வளவு துணிச்சல் வந்தது உனக்கு? இந்தப் பைத்தியசேஷ்டைக்குப் பிராயச்சித்தம் செய்தாகவேண்டும். நீ எந்த ஜாதியில் பிறந்தவள் தெரியுமாடீ!

பிரகிருதி

ஒரு கையளவு நீர்தான் பெற்றுக்கொண்டார். அந்த ஜலம் ஆழமான, எல்லையில்லாக் கடல்போல் ஆகிவிட்டது. எழுகடல் நீரும் அதில் ஒன்ருகிவிட்டது. என் குலம் அதில் அமிழ்ந்து போய்விட்டது; புதுமை பெற்றுவிட்டது.

தாய்

என்னடீ இது! உன் பேச்செல்லாம் அடியோடே மாறிப் போய்விட்டதே! நீ சொல்வதெல்லாம் மாய வார்த்தையாக இருக்கிறதே! நீ சொல்கிறது உனக்கே புரிகிறதா, கொஞ்சமாவது?

பிரகிருதி

சிராவஸ்தி நகரில் வேறு எங்கேயுமே ஜலம் கிடைக்கவில்லையா என்ன, அம்மா? ஏன் இக்கிணற்றின் கரைக்கு அவர் வரவேண்டும்? இதைத்தான், அம்மா, புதுப்பிறப்பு என்பது. மானிடரின் வேட்கையைத் தணிக்கும் பரிசிலை எனக்குத் தரவே அவர் வந்தார். இந்தப் பெரும் புண்ணியத்தையே அவர் தேடிக் கொண்டு இருந்தார். அவருடைய நோன்பைப் பூர்ணமாக்கும் நீர் வேறு எந்தப் புண்ணிய ஸ்தலத்திலும் கிடைக்கவில்லை. அவர் என்ன சொன்னார் தெரியுமா! வனவாஸம் தொடங்கும் பொழுது சீதாபிராட்டி இந்த ஜலத்தில்தான் ஸ்னானம் செய்தாளாம். அதை அவளுக்குத் தூக்கிக்கொண்டு வந்தவன் ஈன குலத் தோன்றிய குஹன் என்றல்லவா சொன்னார் அவர்? அதைக் கேட்டதிலிருந்து என் மனம் ஆனந்தக் கடலாடுகிறது. கம்பீரமான குரல் ஒன்று இரவும் பகலும், 'ஜலம் தா' என்று சொல்லுகிறது.

ஜலம் தா ஜலம் தா என்றது அக்குரல்.
அதைத் தருவேன் நான். இப்பெற்றி தந்தது எவரோ?
கார்முகிலை நோக்கி விரைந்தே வந்தது,
வேட்கையில் வாடும் அந்தச் சாதகப்புள்.
ஜலம் தா என்றது ஒரு குரல்.
மண்ணுள் குமிழும் ஊற்றின் கசிவு

இருளின் சிறையில் மறையுதே அந்தோ!
யாருடையது அந்த ஆழ்ந்த குரலிசை?
இருண்ட என் உள்ளமதை வந்து தாக்குதம்மா
ஜலம் தா ஜலம் தா என்று.

தாய்

எனக்கென்னவோ நல்லதாகப் படவில்லை, அம்மா! அவர்கள் மந்திரவேலை எல்லாம் எனக்குத் தெரியாது. நீ பேசும் பேச்சும் எனக்குப் புரியவில்லை. நாளைக்கு உன் மூஞ்சியும் புரியாமல் போய்விடுமோ என்னவோ? அடேயப்பா, மனுஷனின் உள்ளத்தையே மாற்றும் மந்திரமாக இருக்கிறதே!

பிரகிருதி

இத்தனைநாள் புரியவில்லையா உனக்கு! புரிந்து கொண்டவர் புரிய வைப்பார். அதனால்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ராஜா வீட்டிலும் மணி அடித்தாயிற்று. நல்ல மத்தியான வேளை. 'பெண்கள் எல்லோரும் ஜலம் எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போய் விட்டார்கள். ஆகாயத்தில் எங்கோ தொலைவில் ஒரு பருந்து தனியாகப் பறந்து கொண்டிருந்தது. நான் கையில் குடத்துடன் போய்ப் பாட்டை ஓரத்துக் கிணற்றடியில் உட்கார்ந்தேன்.

தாய்

யாருக்காகடீ?

பிரகிருதி

வழிப்போக்கனுக்காக.

தாய்

உன்னைப்பார்த்து எந்த வழிப்போக்கன் வரப் போகிறானடீ?

பிரகிருதி

ஒரு வழிப்போக்கன் இருக்கிறான், அம்மா! உலகத்தின் வழிப்போக்கர்கள் அனைவரையும் அவர் ஒருவரிடமே காணலாம். நாள் பாட்டில் நாள் போய்க் கொண்டே இருக்கிறது. ஆனால் அவர் வரவில்லையே! ஒன்றும் சொல்லாமல் போனாலும் உறுதி கூறிச் சென்றாரே! ஏன் அதன்படி நடக்கவில்லை. என் உள்ளம் பாலைவனம்போல் ஆகிவிட்டது. பகலெல்லாம் வெறிச்சென்று இருக்கிறது. உஷ்ணக்காற்று ஓவென்று வீசுகிறது. ஆனால் அவரால் அதைத் தணிக்க முடியவில்லையே! யார் வந்தும் கேட்கவில்லையே!

என் கண்களில் தாகம் ஐயோ!
என் நெஞ்சிலும் நிறைதாகம்.
மழைமாறிய கோடையில் எனதுள்ளம்
தாபத்தால் வெம்பிச் சாம்பும்.
வெம்மையில் பிறந்த கடுவளியோ வீசுகிறது,
என் மனத்தை வெற்றிடமாக்கியே,
என் மறைவெல்லாம் பறந்தோடுகிறது.
கானில் கவின்தரும் இச்சிறுமலர்
கரிந்து மண்ணுவதைப் பார்
துயரின் நெடுவரையில் இந்த அருவி
இறங்காமல் தடுப்பவர் யாரோ?

தாய்

நீ இன்று பேசுவதில் ஒன்றுகூடப் புரியவில்லை. உன்னை எந்தப் பித்துப் பிடித்து ஆட்டுகிறதடீ? தெளிவாகச் சொல்லடீ. மனசில் இருப்பதை.

பிரகிருதி

எனக்கு அவர் வேண்டும். ‘உலகம் உன் ஸேவையையும் எதிர்பார்க்கிறது’ என்று திடீரென வந்து

சொல்லிவிட்டுப் போனாரே! என்ன அதிசயமான வார்த்தை! உண்மையில் நான் தொண்டாற்றுபவளே! இந்த உன்மத்த மலரைத் தூசியிலிருந்து எடுத்துத் தம் மார்பகத்தில் அணிந்து கொண்டாரே!

தாய்

அவர்கள் பேச்செல்லாம் காதுக்கு இனிமையே தவிரக் காரியத்திற்கு உதவாது. துரதிருஷ்டவசமாக நீ இழிகுலத்தில் பிறந்துவிட்டாய். அந்த மண்சுவரை இடிக்கவல்ல குந்தாலி எங்கேயுமே இல்லை. நீ தீண்டத் தகாதவள். இந்தத் தீண்டாமையை வெளியில் ஏன் நீ பரவச் செய்கிறாய்! பேசாமல் எங்கே இருக்கிறாயோ, அங்கேயே இரு. நீ இந்த இடத்தை விட்டு வேறு எங்கே போனாலும் குற்றமாகும்.

பிரகிருதி

மண்மேல் பிறந்தது என் புண்ணியவசம் என்றது மலர்.
ஓ தெய்வமே! என் வீட்டில் உன் ஸேவையைக் காண்கிறேன்.

மண்ணிடைப் பிறந்தாலும் என் அகமதில்
சிறிதும் மாசில்லை என்பதை அறிவாய்.
என்னைக் குனிந்தே நீ பார் சற்று.
என் இதழ்கள் துடிக்கின்றன உன்னை நெருங்கிட.
உன் காலால் என்னைத் தொட்டணைவாய்,
துகளில் பிறந்த என்னை உயர்வாக்கிடு நீ.
இந்த மண்மகள் செலுத்தும் வந்தனம் ஏற்பாய்!

தாய்

குழந்தாய்! இப்போதுதான் அம்மா கொஞ்சம புரிகிறது. நீ பெண் பிள்ளை. பணி செய்வதுதான் உனக்கான பூஜை. பணிவிடையில்தான் உன் ஆட்சியெல்லாம். ஒரு கணத்தில் ஜாதியையும் மீறிப்போகக் கூடியவர்கள் பெண்கள்தாம். அவர்களிடத்தில்

ராணியின் அம்சம் இருக்கிறது. பாக்கியம் வரவேண்டியதுதான் பாக்கி. உனக்கு நல்ல சமயம் வாய்த்திருந்தது. வேட்டைக்குப் புறப்பட்ட அரசகுமாரன் இதே கிணற்றங்கரைக்குத்தானே வந்தான்? உனக்கு நினைவு இருக்கிறதாடீ?

பிரகிருதி

ஆமாம், நினைவு இருக்கிறது.

தாய்

ஏன் அரண்மனைக்குப் போகவில்லை? உன் வனப்பைப் பார்த்து அவன்கூடத்தான் மயங்கிப் போனான்.

பிரகிருதி

மயங்காமல் என்ன? நான் மனுஷி என்பதை மறந்தான். மிருகத்தை வேட்டையாடப் புறப்பட்டான்; எதிர்ப்பட்ட மிருகத்திற்கே பொன் விலங்கு போட நினைத்தான்.

தாய்

வேட்டை என்றுதானே அவன் உன்னைப் பார்த்தான்! இந்தப் பிக்ஷு நீ பெண் என்பதை அறிந்துகொண்டானா?

பிரகிருதி

புரியாது. உனக்குப் புரியவே புரியாது; எனக்குத் தெரியும் இத்தனைநாள் கழிந்ததும் அவர்தாம் முதலாக என்னைத் தெரிந்துகொண்டார். ஆச்சரியம்!

உன் கண்களைக் கொண்டு ஓர் உண்மையை வைத்து
இந்த அழியா உருவில் என்னைப் படைத்திட்டாய்!
உனக்கு நமஸ்காரம், உனக்கு நமஸ்காரம்!

நூறு நமஸ்காரம் உனக்கே!
இளம் வைகறையின் பிழம்பு நான்!
மாசற்ற ஒலியின் சிதராவேன்!
புதிய கருமுகில் தரும் மழையின் தலைத்துளியும் நானே.

அவர்தான் வேண்டும், அம்மா! அவசியம் வேண்டும். அவர் எதிரே இந்த ஜன்மத்தை ஸமர்ப்பிக்கவேண்டும். ஆனால், அம்மா, அதனால் அவர் தாள்கள் அசுத்தம் அடையா! என் துணிவை எல்லோரும் பார்க்கட்டும்! பெருமையுடன் நான் ஸேவையில் ஈடுபடுபவள் என்று அவரிடம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இல்லையானால் உலகில் எல்லாருடைய காலின்கீழும் என்றென்றும் அடிமையாகித் துன்புற வேண்டியிருக்கும்.

தாய்

ஏன் அம்மா, வீணில் கோபம் கொள்கிறாய்? நீ பிறந்ததே அடிமைக் குலத்தில்தானே! தலை எழுத்தை யாரால் அழிக்கமுடியும், அம்மா!

பிரகிருதி

சீ! சீ! நம்மையே நாம் ஏன் அம்மா, தூற்றிக் கொண்டு திரியவேண்டும்? அரசகுலத்தில் பிறந்தும் எத்தனையோ அடிமைகள் இருக்கிறார்கள். நான் அடிமையல்ல, அம்மா. பிராம்மண குலத்திலேயே எத்தனையோ சண்டாளர்களைப் பார்க்கிறோம். நான் சண்டாளி அல்ல.

தாய்

உன்னோடு பேச என்னால் முடியாதடீ. சரிதான். நானே அவரிடம் போகிறேன். 'நீரோ ஒவ்வொரு வீட்டிலும் போய் அன்னம் யாசித்துப் புசிப்பவர்.

என் வீட்டில் ஒரு கையளவு தண்ணீர் மாத்திரம் குடிக்க வரமாட்டீர்களா?' என்று காலில் விழுந்து மன்றாடிக் கேட்கிறேன்.

பிரகிருதி

வெளியில் சென்று நான் இவ்வாறு
கூப்பிடமாட்டேன், கூப்பிட மாட்டேன்,
என் உள்ளத்திலேயே அவரைக் கூவி அழைப்பேனே.
என் இதயத்துள்ளே நான் கொடுப்பதைப் பெறுவார் யாரோ!
வேதனை வாட்டுது, அவர் எங்கு சென்றாரோ ?
உள்ளம் ஈந்து பரிந்தே நல்கி
என் குறைதனை ஒழிப்பவர் யாரோ அறியேன்.
அவர் படும் துயரும் என்னுள் துயரும்
ஒன்றியே இணையாதோ?
இருளார் யமுனையில் ஒள்ளிய கங்கைவந்து படியாதோ ?
தானே எழுந்தது. இன்னிசை ஒன்று ; வாடை விம்மிற்று ;
தாமே அவர் என் அண்டையில் வந்தார்.
திரும்பவும் வருவேனென்று ஆசையும் காட்டினார் பார் !

மழையின்றி மாநிலம் வெடித்துக் கிடக்கும் நிலையில், ஒரு குடம் ஜலத்தால் என்ன ஆகும், அம்மா? எங்கேயாவது மேகம் தானாக வருமா, அம்மா, ஆகாயம் நிறைய ?

தாய்

இந்தப் பேச்செல்லாம் பேசி என்ன லாபம்? மேகம் தானாக வந்தால் என்ன, வராவிட்டாலும் என்ன. வயல் வெளி வறண்டுபோகிறது. அதனால் யாருக்கு என்னடி? நாம் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறோம். நம்மால் வேறு என்ன செய்யமுடியும்?

பிரகிருதி

அது நடக்காது, அம்மா. வீணாக உட்கார்ந்திருக்க மாட்டேன். உனக்கு மந்திரம் தெரியும். அவரை அதனால் இழுத்துக்கொண்டு வா!

தாய்

என்ன பேச்சடீ இது? நாசக்காரி! ஏதேது, வரவரத் துணிச்சல் அதிகமாகிறது; நெருப்போடே யாடீ விளையாடுவது? அவர்கள் சாதாரண மனிதர்களா? நம் ஜபமெல்லாம் அவர்களிடம் சாயுமா! குடல் நடுங்குகிறதேடீ!

பிரகிருதி

ராஜகுமாரன்மேல் மட்டும் மந்திரத்தை விடுகிறேன் என்று எந்தத் தைரியத்தின்மேல் சொன்னாயாம்?

தாய்

அரசனுக்கு நான் பயப்படவில்லை. அவன் என்னைக் கழுவில் ஏற்றலாம்! ஆனால் இவர்கள் ஒன்றுமே செய்வதில்லையே!

பிரகிருதி

எனக்கு இனிமேல் ஒரு பயமும் இல்லை. மறுபடியும் கீழ்நிலைக்கு வந்துவிடப் போகிறேனே என்ற பயந்தான்! மீண்டும் என்னையே மறந்து இருண்ட குழியில் விழுந்துவிடப் போகிறேனே என்று பயப்படுகிறேன். அது சாவைக் காட்டிலும் கொடியது, அம்மா! அவரை அழைத்தே ஆக வேண்டும். இவ்வளவு பெரிய காரியத்தை இவ்வளவு உறுதியாகச் சொல்கிறேனே! இது ஆச்சரியமாக இல்லையா? இந்த ஆச்சரியத்தை உண்டாக்கியவர்

அவர்தாம், அம்மா! இன்னும் அதிசயமானது நடக்காதா, அம்மா? அவர் என்னிடம் வரமாட்டாரா? என் மடியில் வந்து உட்காரமாட்டாரா?

தாய்

ஒரு வேளை அவரை அழைத்து வரமுடியும் என்று வைத்துக்கொள்; அவருக்கு மரியாதை செய்ய உன்னால் முடியுமாடீ? உன்னிடம் என்னடீ இருக்கிறது?

பிரகிருதி

வேண்டாம், ஒன்றுமே இருக்கவேண்டாமே! என் ஜன்ம ஜன்மாந்தரங்களின் கடமை ஒன்றுமே இருக்காது. எல்லாம் கரைந்து போனால் நான் பிழைத்துப் போவேனே! எனக்கு அவர் வேண்டும். வேறு ஒன்றுமே இருக்கவேண்டாம். நான் யுகயுகமாகக் கோரி இருப்பது இந்த ஜன்மத்தில் ஈடேறும். 'உன் எண்ணம் நிறைவேறும்' என்றே என் உள்ளம் சொல்லுகிறது. ஆகவே, 'குடிக்க ஜலம் தா' என்ற அதிசயமான வார்த்தை என் செவிக்கு எட்டியது. என்னாலும் கொடுக்கமுடியும் என்பதை இன்று உணர்ந்தேன். இதுவரை என்னிடம் எல்லாரும் இந்த உண்மையை மறைத்தே வைத்திருந்தார்கள். கொடுப்பேன்! என்னிடம் உள்ள எல்லாவற்றையும் இன்று ஸமர்ப்பிக்கவே நான் அவரை எதிர்பார்த்துக் கிடக்கிறேன்.

தாய்

நீ தர்மத்தை நம்புகிறாயாடீ?

பிரகிருதி

எப்படிச் சொல்வது! என்னை யார் மதித்தாரோ, அவரைத்தான் நான் மதிக்கிறேன். என்னை இழி குலத்தவள் என்று சொல்லும் தருமம் தருமமே அல்ல. எல்லாருமாக அந்தத் தர்மத்தை எனக்குப் புகட்டினீர்கள். ஆனால் அந் நன்னாள் தொடங்கி இந்தத் தர்மத்தை நம்பக்கூடாது என்று எனக்குக் கட்டளை. இனி எனக்கு யாதொரு பயமும் இல்லை. உச்சாடனம் செய் உன் மந்திரத்தை. ஈனப் பெண்ணின் அருகே வர அந்தப் பிக்ஷுவை வசியம் செய். அவருக்குரிய மரியாதை செய்ய எனக்குத் தெரியும்.

அவரை நான் அறிவேன்.
என்னைத் தன் இனமெனக் கருதும்
அவரை நான் அறிவேன்.
என் கடமை அவருக்கு எதையும் தருவது,
அதைப் பெறுவதோ அவர் உரிமை,
அவர் என்னை அறிந்துகொண்டதே
அவரை நான் புரிந்து கொள்வது போலாகும்.
என்றன் உள்ளமும் அவரது நெஞ்சமும்
ஒளிவழியே சேர்ந்து செல்வதைக் காண்பாய்!
மன இருளில் மயங்கிப்போன அவர் மட்டில்
என்றும் நான் மறைந்தவளாவேன்.
உரைகல் தீண்டியபோது உள்ளத்துள் தங்கமானேன்.
இத்துயரின் திரையும் மெல்ல விலகியதே.
அவ்வொளிமுகம் பருக விரைந்தன, இந்தக் கண்கள்.

தாய்

சாபம் வருமே என்று பயப்படவில்லையாடீ நீ?

பிரகிருதி

சாபக்கேடு நம் பிறவியிலேயே இருக்கிறது. ஒரு சாபம் மற்றொரு சாபத்தை அடித்துவிடும். வேறு வார்த்தையே வேண்டாம். ஆரம்பி, அம்மா, உன் மந்திரத்தை. இனி நான் பொறுக்கமாட்டேன்.

தாய்

சரி, அப்படியானால் அவர் பெயர் என்ன? சொல்.

பிரகிருதி

அவர் பெயர் ஆனந்தன்.

தாய்

ஆனந்தனா? பகவான் புத்தரின் சிஷ்யரா?

பிரகிருதி

ஆமாம், அதே பிக்ஷுதான்.

தாய்

நீ என் உள்ளத்துள் கரு; என் கண்ணின் கருமணி உன் வார்த்தையால்தான் இன்று நான் இந்தப் பாபச் செயலில் இறங்குகிறேன்.

பிரகிருதி

பாபம் எதற்காக, அம்மா? எல்லாரையும் தம்மிடம் இழுத்துக் கொள்பவரை நம்மிடம் இழுத்துக் கொள்வதில் தவறு என்ன, அம்மா?

தாய்

அவர் தம் புண்ணியபலத்தால் ஜனங்களைத் தம்மிடம் இழுக்கிறார். நாமோ மந்திரத்தால் இழுக்கிறோம், விலங்கைப் பொறிக்குள் இழுப்பதுபோல. நாம் குளத்தைக் கலக்கிச் சேற்றைத்தான் எடுக்கிறோம்.

பிரகிருதி

அதுவும் நல்லதுதானே, அம்மா. இல்லாவிட்டால் சேறு எப்படி வெளிக்கிளம்பும்?

தாய்

'பூஜிக்கத் தகுந்தவரே! தவறு இழைக்க என்னிடம் உள்ள சக்தியைக் காட்டிலும் மன்னிக்கும் சக்தி தங்களிடம் அதிகமாக இருக்கிறது. பிரபுவே! உங்களுக்குத் தவறு இழைக்கும் நோக்கத்துடன் உட்கார்ந்திருக்கிறேன். ஆனாலும் என் வணக்கத்தை ஏற்றுக் கொள்வீர்!'

பிரகிருதி

உனக்கு எதற்காக அம்மா, பயம்? நான்தானே உன் மூலமாக இந்த ஜபத்தைச் செய்கிறேன்! நான் வேதனை தாளாமல் அவரை என் பக்கம் இழுத்துக் கொள்வது பெருந்தவறானால், அந்தப் பிழையை நான் செய்யத் துணிந்துவிட்டேன். திருப்தியின்றித் தண்டனை மட்டும் விதிக்கும் சட்ட திட்டங்களுக்கு நான் அடங்கிப் போகமாட்டேன்.

வைதிடு என்னை ; வைதிடு என்னை.
மண்ணில் புரண்டு வாடும் மலரைக்
கொள்வாய் உன் கழலடியில்.
பிழைகள் மலிந்த இவ்வுடலினை
உனக்கே வைத்திட்டேன்.
உன் கருணையைக்கொண்டே நிரப்பிடுவாய்
இவ்வெற்று வாழ்வினை.
நீயோ உயர்ந்தவன் ; இழி குலத்தவள் நான்.
உன்னைப் பிணைத்திடுவது மா பெரும் தவறு.
பிழையெலாம் பொறுத்துத் தூய்மை ஆக்கி
மாலையாய் அணிவாய் என்னை உன் கழுத்தில்.

தாய்

என்ன துணிச்சலடி, பிரகிருதி, உனக்கு?

பிரகிருதி

என் துணிச்சலா! அவருடைய தைரியத்தை நினைத்துப் பார். யாரும் என்னை அண்டிச் சொல்லாத அந்த வார்த்தையைச் சொன்னாரே! 'ஜலம் தா' என்றாரே. ஒரு சின்ன வார்த்தைதான். அதற்குள்ள வசீகரம் எவ்வளவு! என் வாழ்வு ஒளி பெற்றதே, அம்மா! மார்பை அழுத்திக்கொண்டிருந்த கருங்கல்லைத் தூக்கி எறிந்து விட்டாரடி! சுவையின் ஊற்று துள்ளி யெழுந்தது. நீ பயப்படுவது வீண், அம்மா. அவரைப் பார்க்க வில்லையே நீ! காலை முழுதும் சிராவஸ்தி நகர மெல்லாம் பிச்சை எடுத்தார். வயல் வெளியைத் தாண்டி, இடுகாட்டைக் கடந்து, ஆற்றோரமாக நடந்து வந்தாரே நல்ல வெயிலில்; எதற்காக? என்னைப்போன்ற ஒரு பெண்ணிடமும் 'நீர் தா' என்ற அந்தச் சொல்லை கூறத்தான், அம்மா! என் உயிர் நிலைக்காது. இவ்வளவு அருளும் அன்பும் எங்கிருந்து வந்தனவோ? எதற்கும் தகுதியற்ற இந்தக் கோழையின்மேல் விழுந்தனவே! இனிமேல் பயம் எதற்கு? 'நீர் தா' - அந்த நீர் என் வாழ்வை நிரப்பிக் கொந்தளிக்கிறதே! கொடுக்க முடியாதுபோனால் என் உயிர் நில்லாது. 'ஜலம் தா' - ஒரு கணத்தில் என்னிடம் அளவற்ற ஜலம் இருப்பதை உணர்ந்தேன். அதை யாரிடம் தெரிவிப்பேன் நான்! ஆகவேதான் இராப்பகலாய்க் கூவுகின்றேன். உன் மந்திரத்தை ஜபி. அவர் அதைத் தாங்குவார்!

தாய்

வயலோரமாகப் பாட்டையில் சீவர ஆடையுடன் யாரோ போகிறார்களடீ!

பிரகிருதி

அவர்கள்தாம் அம்மா ஸங்கத்தைச் சேர்ந்த சமணர்கள். அவர்கள் சொல்லும் மந்திரம் காதில் விழ வில்லையா ?

[பாட்டையில் சமணர்கள் கூறும் மந்திரம்]

"புத்தோ ஸுஸுத்தோ ககரு மஹாரண்ணவோ
யோச்சந்து ஸுத்தவ்வர-ஞானலோசனே
லோகஸ்ஸ பாபூபகிலேஸ காதகோ
வந்தாமி புத்தம் அஹம் ஆதரேண தம்!"

பிரகிருதி

அம்மா, அதோ எல்லாருக்கும் முன்னால் அவர் போகிறார். இந்தக் கிணற்றங்கரையைத் திரும்பிப் பார்க்கவே இல்லையே! இன்னும் ஒரு முறை 'நீர் தா என்று சொல்லக்கூடாதா! அவர் என்னைத் தள்ள மாட்டார். அவர் கையில்தானே நான் புது வாழ்வைக் கண்டேன் ?

[அடிக்கடி தரையில் தலையை முட்டிக்கொண்டு]

மண்ணே! உன்னைச் சேர்ந்தவள்தான் நான்! துரதிருஷ்டம் பிடித்தவளே! உன்னைக் கணப் பொழுது இந்த ஒளியை யார் காணவிட்டார்களோ! அதைக் கருணை என்பதா? கடைசியில் மண்ணோடு மண்ணாக வேண்டியதுதானே, எல்லாருடைய காலி லும் மிதிபட.

தாய்

குழந்தாய்! நடந்ததை யெல்லாம் மறந்துவிடு. உன் ஒரு கணநேரக் கனவைச் சிதைத்துவிட்டு அவர்கள் போகிறார்கள். போகட்டும் அவர்கள். நிலை

யில்லாத விஷயம் சீக்கிரம் சென்று விடுவது நல்ல தல்லவா!

பிரகிருதி

அன்ருடம் நான் அவரை நோக்கி விழைவது, ஒவ்வொரு கணமும் நான்படும் இந்த அவமானம், என் உள்ளத்தில் அடைபட்டு இறகடித்துச் சாகும் எண்ணங்கள் இவை யெல்லாம் கனவா? என்னை விட்டகலாது, என் ரத்தத்துள் ஊறும் இந்த வேதனை சொப்பனமாகுமா? இதோ அவர்கள்! எவ்விதமான கட்டும் இல்லை; ஸுக துக்கம் இல்லை; உலகில் எதன் மேலும் பற்று இல்லை. சரத்கால மேகம்போல யதேச்சையாகத் திரிகிருர்கள். அவர்கள் விழித்துக்கொண்டிருக்கிருர்கள். அது கனவாகுமா?

தாய்

நீ படும் கஷ்டம் பார்க்கச் சகிக்கவில்லை, அம்மா, எழுந்திரு. மந்திரத்தால் அவரைக் கட்டுப்படுத்து கிறேன். இந்த மண் வழியாகவே அவரை அழைத்து வருகிறேன். 'ஒன்றும் வேண்டாம்' என்ற அவர் அகந்தையை உடைத்தெறிவேன். "வேண்டும் வேண்டும்' என்று அரற்றியபடி அவரை ஓடி வரச் செய்வேன்.

பிரகிருதி

உன் மந்திரம் சிருஷ்டிக்கும் முந்தினது. அவர் களுடைய மந்திரம் பக்குவமற்றது. உன்னுடன் அவர்களால் போட்டியிட முடியுமா? அவர்களது மந்திர முடிச்சு உன் வசிய பலத்தால் அவிழ்ந்து போகாதா! அவர் தோற்றுத்தான் போவார், அம்மா!

தாய்

அவர்கள் எங்கேயடீ போகிருர்கள் ?

அவர்கள் போகிருர்கள்—இது மட்டுமே தெரியும். அவர்கள் அநேகமாக எங்குமே போவதில்லை. இன்னும் கொஞ்ச நாட்களில் மழைக் காலம் வரும். அப்போது சாதுர்மாஸ்ய விரதம் செய்வார்கள். அப்புறம் எங்கே போவார்களோ தெரியாது. இதைத் தான் அவர்கள் 'விழிப்பு' என்று சொல்கிருர்கள்.

தாய்

அப்படியானல் ஏண்டீ மந்திரத்தைப்பற்றிச் சொல்கிருய்? பைத்தியமே! வெகு தொலைவில் சென்று விட்டவர்களை எப்படி திருப்பிக்கொணர்வது?

பிரகிருதி

எங்கே போனலும் திரும்பி வந்தாகவேண்டும்; உன் மந்திரத்துக்குத் தொலைவு என்பது ஏது ?

கடல் முடிவுக்கானலும் போகட்டும்;
திரும்பி வரத்தான் வேண்டும்! வரத்தான் வேண்டும்!
அவர் வந்து அமர என் உள்ளமதில் இடம் தருவேன்!
கண்ணீரால் அவர் வரும் புழுதி வழியை நனைத்திடுவேன்.
மலை உச்சியில் மறைந்தாலும் வருவார் அவர்.
துயர் இருட் குகையினுள் இருந்தே கூப்பிடுவேன் அவர்.
என் கனவும் அவர் நினைவும் ஒன்றிவிடுமே,

என்னிடம் அவர் கருணை காட்டவில்லை. அவரிடம் நான் கருணை காட்டமாட்டேன். உன் மந்திரங்களுக்குள் கொடியதை ஜபி. அது கொஞ்சங் கொஞ்சமாக அவர் உள்ளத்தை எரிக்கட்டும். என்னை

ஏமாற்றி விட்டு அவர் எப்படிப் போவார்? பார்க்கலாம் அதையுந்தான்!

தாய்

கவலை ஏன்? காரியம் முடியாது போகாது. உன்னிடம் மாயக்கண்ணாடி ஒன்று தருகிறேன். அதைக் கையில் வைத்துக்கொண்டு கூத்தாடு. அவர் நிழல் அதில் விழும். அதிலேயே அவருக்கு என்ன நேர்ந்தது, எவ்வளவு தூரம் வந்தார் என்பதை நீ காணலாம்.

பிரகிருதி

இதோ பார், மேற்கே மேகம் கவிகின்றது - மழை மேகம்! மந்திரம் பலிக்கிறது, அம்மா. உலர்ந்த சருகுபோல் அவருடைய வறண்ட ஸாதனையெல்லாம் பறந்து போகும், அம்மா. விளக்கு அணையும். வழி தெரியாது போய்விடும். சுற்றியலைந்து இந்த வாயிலின் அருகேதான் வருவார். நள்ளிரவில், புயலில் கூடு இழந்த பக்ஷி போல் கடைசியில் என் இருண்ட வீட்டின் முற்றத்துக்குத்தான் வரவேண்டும். மார்பு படபடக்கிறது. உள்ளத்தினூடே மின்னல் பாய்கிறது பொங்கிப் பொங்கி அலை எழும்புகிறது. இந்தக் கடலுக்கு ஓர் எல்லையே காணேன்!

தாய்

யோசித்துப் பார். நடுவில் பயந்துகொண்டு பின் வாங்கமாட்டாயே! உனக்குத் தைரியம் இருக்கிறதா? மந்திரத்தின் வேகம் ஏறிக்கொண்டு போகும்போது நீ தடுத்தாயானல் என் உயிர் போய்விடும். எல்லாவற்றையும் சாம்பலாக்கி விட்டுத்தான் இந்த நெருப்பு அணையும். இதை நினைவில் வைத்துக்கொள்.

பிரகிருதி

யாருக்காக நீ பயப்படுகிறாய்? அவர் என்ன அப்படிப்பட்ட மனுஷரா? அவருக்கு ஒன்றும் நிகழாது கனவின் வழியே கடைசிவரை வரட்டும் அவர். என் மனக்கண் முன் இதோ பார்க்கிறேன், ஓர் பயங்கர இரவை: நாங்கள் கூடும் ஓர் பெரும் புயலை; எல்லாம் சிதைந்தொழிந்த ஒரு பேரின்பத்தை.

திமி திமி யென்றே இதயத்துள்
அதிர்ந்தது இடியின் முரசம்.
வானம் சிவந்தது, சிலிர்த்தன புதல்கள்;
விரைந்தே ஆடியது ஊசல் உள்ளம்.
கனவிடை என் ஆகம் தொட்ட அவ் விருந்தினன்யாரோ?
கடுவளி மோதும் பெருந்துளி மழையின் ஒலம்;
இமைக்கும் மின்னல்; வருத்திடும் கங்குல்.
கொழு இலை மௌவல் கொடியொடு நடுங்கும்.
அளிதோ! சிள்ளினம் புலம்பும் இவ்வருள் இல்காடே!

இரண்டாம் காட்சி

பிரகிருதி

நெஞ்சு வெடித்து விடுமே! நான் கண்ணாடியைப் பார்க்கமாட்டேன். முடியாது என்னால். எவ்வளவு பயங்கரமான வேதனைச் சுழல்! பெரிய மரங்கள் கடைசியில் மடமடவென்று முறிந்து கீழே விழுந்து விடுமோ? வானளாவிய அவருடைய புகழ் தரைமட்டமாகுமோ?

தாய்

பாரம்மா குழந்தாய், நீ சொன்னால் இப்போது கூட என் மந்திரத்தைத் திருப்பிக்கொள்வேன். அத

ஞல் என் உயிர் போனாலும் போய்விடட்டும். அது தான் நல்லது. அந்தப் பெரிய உயிர் பிழைக்கட்டும்.

பிரகிருதி

அதுதான் நல்லது, அம்மா. போதும் உன் மந்திரம்; இனிமேல் அவசியமில்லை. வேண்டாம்! வேண்டாம்! இன்னும் எவ்வளவு தூரந்தான் இருக்கிறது? கடைசி வரையிலும் வரட்டும் அவர். வரட்டும், அவர் இந்த உள்ளத்தை நெருங்கும் வரை. என் வாழ்வே தலைகீழாக மாறும். என் உள்ளத்தில் எரியும் வேதனையைக் கொண்டே விளக்கேற்றுவேன். என் இதயத்தில் உள்ள இன்ப ஊற்றைத் திறந்துவிடுவேன். அதில் அவர் திளையட்டும். எவ்வளவு களைத்திருப்பார் அவர்! அதில் அவர் அமிழ்ந்து குளிக்கட்டும். கடைசியில் என்னை 'ஜலம் தா' என்று கேட்பார்—என் இதயக் கடலின் நீர் அனைத்தையும். அந்த நாள் வரும். உன் பாட்டில் மந்திரத்தைச் சொல்லு.

தாய்

இவ்வளவு தாமதமாகும் என்று தெரியாமல் போய்விட்டதே! ஜபமும் முடிகிற ஸமயம். என் உயிர் கழுத்திற்கல்லவோ வந்துவிட்டது.

பிரகிருதி

பயப்படாதே, அம்மா, இன்னும் கொஞ்சநேரந் தான். அதிக நாழிகை ஆகாது.

தாய்

ஆடிமாதம் வந்துவிட்டது. அவர்களுடைய சாதுர்மாஸ்யவிரதம் ஆரம்பமாகி இருக்குமே!

பிரகிருதி

வைசாலியிலுள்ள கோசிர சங்கத்துக்குப் போயிருக்கிறார்கள்.

தாய்

எவ்வளவு பொல்லாதவளடீ நீ! அது வெகு தூரமா!

பிரகிருதி

அதிக தூரமில்லை. ஏழேநாளில் போகலாம். போய்வரப் பதினைந்து நாட்கள் ஆகும். பீடம் தளர்ந்திருக்கும் இத்தனை நாளில். வருகிறார். வெகு தொலைவானாலும், லக்ஷயோஜனைகள் தூரமானாலும், சந்திர சூரியர்களுக்கப்பால் இருந்தாலும், என் கைக்கெட்டாத தூரமானாலும் அவர் வருவார்—என் அருகில் வந்துவிடுவார். என் உள்ளத்தில் பெரிய பூகம்பம் தோன்றுகிறது.

தாய்

மந்திரத்தின் அங்கங்கள் யாவும் பூரணமாகிவிட்டன. இதனால் வஜ்ரபாணியான இந்திரனையே இழுக்கமுடியும். ஆனாலும் தாமதம் ஆகிறதே. இது சாவளவுக்குப் போராகும்போல் இருக்கிறதே! கண்ணாடியில் என்ன தெரிகிறது, பார்த்தாயா?

பிரகிருதி

முதலில் தென்பட்டது ஆகாயமளாவிய மூடுபனி—அசுரர்களோடுபோராடி இளைத்து வெளுத்த தேவதையின் முகம்போல. மூடுபனிக்கு இடுக்கில், நெருப்பு வெளியே வந்தது. அப்புறம் துண்டுதுண்டாக அகன்றது பனி. பெரிய விரணக்கட்டி வெடித்தாற்போலச் செந்நிறம் பரவியது. அடுத்த நாள் கருமேகம் தென்

பட்டது. அதனுள் மின்னல் விளையாடிக்கொண்டிருந்தது. அவர் எதிரே நின்று கொண்டிருந்தார். அவர் உடலைச் சுற்றி நெருப்பு சூழ்ந்து இருந்தது. அதைப் பார்த்து என் ரத்தம் உறைந்துவிட்டது. 'மந்திரத்தை நிறுத்திவிடு' என்று உன்னிடம் சொல்ல ஓடிவந்தேன். நீ நினைவற்றிருந்தாய்; சிவனுடைய கண்கள்போல உன் கண்களில் கனல் மூண்டிருந்தது. மரமென விறைத்து உட்கார்ந்து இருந்தாய். பெருமூச்சு வாங்கியது. உன் உள்ளத்திலும் ஏதோ தீ இருந்திருக்க வேண்டுமென்று எனக்குப் பட்டது. தம்மைக் காத்துக்கொள்ள அவர் எழுப்பிய ஒரு தீயை உன் மந்த்ராக்கினி சீறும் நாகம்போல் தாக்கியது. தொந்தயுத்தம் நடந்துகொண்டிருந்தது. திரும்பி வந்து கண்ணாடியை எடுத்துப் பார்த்தேன். ஒளி அணைந்துவிட்டது. வெறும் துயர், துயர், துயரின் உருவையே கண்டேன்.

தாய்

அதைப் பார்த்ததும் உன் பிராணன் போய்விடவில்லையா? அதன் தீவிர ஜ்வாலை என் உயிரையும் வாட்டியது. இனிப் பொறுக்கமுடியாது என்று தோன்றியது.

பிரகிருதி

நான் கண்ட துயர் உருவம் அவர் ஒருவருடையது மட்டும் அல்லவே! எங்கள் இருவருடையதுந்தான் அந்தத் துயரம். அந்த பயங்கர ஜ்வாலையில் பொன்னும் செம்பும் உருகிக் கலந்துவிட்டன.

தாய்

நீ திடுக்கிட்டுப் போகவில்லையா?

பிரகிருதி

பயத்தைவிட இன்னும் அதிகம்! ருத்திர தேவதையையே கண்டதாக நினைக்கிறேன். பிரளயத்தைக்காட்டிலும் என்ன பயங்கரமான காட்சி! அவர் கனலைத் திரித்து ஆட்டினார். பெருந்தீயும் சிறியது. அவர் காலடியில் இருக்கும் ஏழு தாதுக்கள் அடங்கிய உலோகக்குடுவை பொங்கி வழிந்தது. உயிரோ அல்லது சாவோ? என் மனத்துள் ஓர் இன்பம் கொந்தளித்தது. அதை என்னவென்று சொல்வது! புதிய சிருஷ்டியில் காணும் எல்லையற்ற வைராக்கியம்! சிந்தை இல்லை, அச்ச மில்லை, கருணை இல்லை, துக்கமில்லை. எல்லாம் சிதைவுண்டு பற்றி எரிந்தன. உருகி வழிந்தன. பொறிகளாகச் சிதறின. எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. என் உடலும் உள்ளமும் குதிக்கத் தொடங்கின, அழல்கொழுந்துபோல.

பெருந்துயரே, வெருளியின் உருவே, பயங்கரனே,
மங்களம் விளைக்கும் ஊழிக் கூத்தா!
உன் சடைக் கற்றையில் நழுவும் கனலரவு தீண்டியே
துடிக்கும் இந்த அகில சராசரங்கள்.
கனகன ஜனஜன ஜனனன் ஜனனன்;
வளைந்தது உன் வில்; விளைந்தது பூசல்,

தாய்

உன் பிக்ஷு எப்படி இருந்தார்?

பிரகிருதி

தொலைவை நோக்கி இமையாக் கண்களுடன் இருந்தார், சக்கரவாளத்தில் விண்மீன் போன்று. என்னை

விட்டே அநேக காதவழி நான் விலகிப் போகவேண்டு மென்ற ஆசை கிளம்பியது.

தாய்

நீ கண்ணுடியின் முன் குதிக்கவில்லையா! அதைப் பார்த்து இருக்கலாம் அவர்.

பிரகிருதி

சீச்சீ! என்ன வெட்கக்கேடு! அவர் கண்கள் சிவந்து வரவே, சபித்து விடுவாரோ என்று எனக்குத் தோன்றியது. கோபத்தழலைக் காலின்கீழ் அடக்கிக் கொண்டு நின்ருர். கோபத்தால் நடுங்கியவாறு என் உள்ளே அம்புபோல அவர் வருவதைப் பார்த்தேன். உள்ளத்துள் ஊடுருவிப் பாய்ந்தாரடீ

தாய்

இத்தனையும் பொறுத்துக் கொண்டிருந்தாயா நீ?

பிரகிருதி

எனக்கே அதிசயமாக இருந்தது. நான் உன் பெண்தானு!—இவளா உன் பெண்? இவள் துயரமும் அவர் வேதனையும் இன்று ஒன்ருகிவிட்டன. எந்தப் படைப்புத்தொழிலில் இவ்விதம் நடக்கும்? இவ்வளவு பெரிய விஷயத்தை யாராகிலும் யோசனை செய்த துண்டா?

தாய்

இந்தத் தொல்லை என்று ஒழியுமோ?

பிரகிருதி

என் துயர் அடங்கினுல் ஒழிய அடங்காது. அது வரை அவரையும் வேதனைக்கு உள்ளாக்குவேன். நான்

விடுதலை அடையாவிட்டால் அவர் மாத்திரம் எவ்வி தம் விடுதலை அடைவார்?

தாய்

கடைசியாக நீ எப்போது கண்ணுடியைப் பார்த் தாய்?

பிரகிருதி

நேற்றுமாலை. வைசாலி நகரவாயிலைக் கடந்து சில நாட்களுக்கு முன்னுல் நடுநிசியில் வெளிவந்தார்—சம ணர்களுக்குத் தெரியாமல் ரகசியமாகத்தான் என்று நினைக்கிறேன். துறையில் படகேறி ஆற்றைத் தாண் டினுர். போகமுடியாத மலைகளையும், மாலைவேளையில் தன்னந்தனியே கடந்து வந்தார். இருளில் கானக வழியே வந்துகொண்டு இருந்தார். நாள் போகப் போகக் கனவின் மயக்கம் அதிகமாகியது. யோசனை ஒன்றும் இல்லாமல் போய்க்கொண்டே இருந்தார். மனத்தில் போராட்டமெல்லாம் முடிவு பெற்றுவிட் டன. முகத்தில் வாட்டம், உடலில் தளர்ச்சி, கண்களில் சூன்யமான பார்வை. பொய், மெய் இல்லை; நல் லது, கெட்டதில்லை. உத்தேசமின்றிக் குருட்டு லக்ஷ் யத்தை நோக்கிப் போனுர். அதற்கு அர்த்தமே இல்லை.

தாய்

இன்று எங்கே வருகிறுர் என்று பார்த்தாயா?

பிரகிருதி

நேற்று மாலை உபலி நதியின் கரையில் பாடல கிராமத்தில் கண்டேன். புது வெள்ளம் பொங்கி ஓடிக்கொண்டு இருந்தது. துறையருகே ஒரு பழைய அரசமரம். மின்மினிப் பூச்சிகள் கிளைகளில் மின்னின.

அடியில் பாசிபடர்ந்த மேடை. அங்கு வந்ததும் திடுக்கிட்டு நின்றார். வெகு நாளாகப் பழக்கமான இடம். பகவான் புத்தர் இங்கேதான் ஸுப்ர பாஸனுக்கு உபதேசம் செய்தார் என்று எனக்குத் தெரியும். அங்கே கைகளால் முகத்தை மூடிக்கொண்டு உட்கார்ந்தார். திடீரெனக் கனவு முறிந்தது! கண்ணுடியை வீசி எறிந்துவிட்டேன். என்ன நேரப் படுமோ என்ற திகில் என்னைப் பிடித்துக்கொண்டது. நாள் இப்படியே முழுவதும் கழிந்தது. ஒன்றும் தெரிந்துகொள்ள ஆவல் இல்லை. நம்பிக்கைமட்டும் இருக்கிறது. ஆனல் அச்சமயம் அதுவும் இல்லை. இப்போது இருட்டிவிட்டது. பாராக்காரன் கூவிக் கொண்டு செல்கிறுன் பார், வீதியில். நடுநிசி ஆகிவிட்டது; இனிமேல் சமயம் இல்லை. இன்றைய இரவை வீண் செய்யாதே. உன் முழுப்பலத்தையும் பிரயோகம் செய் அம்மா.

தாய்

என் கண்ணே! இனிமேல் என்னுல் முடியாதம்மா! மந்திரம் அதன் வலிமையை இழந்து விட்டது. என் உயிரும் உடலும் படிப்படியாகத் தளர்ந்து விட்டன.

பிரகிருதி

இந்த நிலையில் விட்டுவிடாதே, அம்மா! ஒன்று திரும்பவாவது திரும்பட்டும், அம்மா! கடைசியாக அபிசார மந்திரத்தைப் பிரயோகம் செய். அப்புறம் இந்தப் பிறப்பில் என்னைவிட்டுப் போயேவிடுவார். என் கைக்குள் அகப்படவே மாட்டார். அப்புறம் என் வாழ்வு கனவாகிவிடும். மறுபடியும் ஈன ஜன்

மத்தின் நிழல்தான் நிற்கும். அத்தகைய பொய்மையைச் சகிக்க முடியாது, அம்மா. உன் காலில் விழுகிறேன். உன் சக்தியை இதில் செலுத்து. ஆரம்பி, அம்மா, உன் வஸுந்தரா மந்திரத்தை. புண்ணியசாலிகளின் துஷிதலோகம் நடுங்கட்டும்.

உன்மண்ணிலே பிறந்த மகள் நானே,
மாநிலத்தாயே!
இப்பிறவியை விணுக்குகிருய் ஏனே ?
தூயவள் என்று நான் அறிவேன் உன்னை,
எவனை ஈன்றவளே ;
மாவிடப் பெண்ணுய்ப் பிறந்தது என்பாக்கியம்.
புண்ணியம் நிறைந்த பிராணியாவேன்
சொர்க்க வாழ்வை நம்பி
உன்னை அவர்கள் இழிவு படுத்துகிருர்கள்.
உன்மடியில் பிறந்து வளர்ந்தும்
உன்னை அவர்கள் அலக்ஷயம் செய்கிருர்கள்.
நானே உனக்குரியவள் ;
உன் அருகில் இருப்பவள் என்றும் ;
உயிரை வாங்கும் உன் மாயவன்மையை
அளிப்பாய் எனக்கு, தாயே !

தாய்

நான் சொன்னபடி செய்யச் சித்தமாக இருக்கிருயாடி ?

பிரகிருதி

துணிந்தேன் ! நேற்றுச் சுக்லத்துதியை இரவு. கம்பீர தடாகத்தில் மூழ்கினேன். இதோ அரிசி, குங்குமம், ஸப்தமணிகள். சக்கரமும் வரைந்து இருக்கிறேன் முற்றத்தில். மஞ்சள் செடிகளை நாட்டியிருக்கிறேன். தட்டில் பூமாலையும் சந்தனமும் இக்கின்றன. விளக்

கும் எரிகிறது. குளித்துவிட்டு நெல்நிறம்படைத்த புடவையை அணிந்திருக்கிறேன். கிழக்கு நோக்கி மேடை அமைத்து அதில் இரவு முழுவதும் அவர் உருவையே தியானம் செய்திருக்கிறேன். பதினாறு பொன் நிறக்கயிற்றில் பதினாறு முடிகள் போட்டு இடதுகையில் ரக்ஷாபந்தனமும் அணிந்திருக்கிறேன்.

தாய்

சரி, அந்த நல்வரவு கீதத்தைப் பாடிக்கொண்டே ஆடு. பிரதக்ஷிணம் செய். நான் வேதிகை அருகே மந்திரத்தை உச்சரிக்கிறேன்.

என்றன் முகையினுள் இன்மணம் போல வருவாய்
இருளார் என் அகத்துள் நல்நிசியில் வருவாய் !
விலையில்லா என் சிப்பிக்குள்ளே
முத்தேபோல் வருவாய் - என் முத்தியின் மணியே !
என்றன் மௌனயாழின் நரம்பிடையே
இன்னொலியாய் வருவாய் !
புலர் காலையில் உன் அழைப்பு வரவேணும்.
மாளா இருள் மறைந்தொழியட்டும் - வாராய் நீ !
இன்முறுவல் விடிவெள்ளியில் வாவிரைந்தே.
பனியில் விழித்துளியாய் வருவாய்
உன் செங்கதிர்க் கரம் தொட்டு வைகறை நுதலில்
குங்குமம் இட வருவாயே !

பிரகிருதி, போய் உன் கண்ணாடியில் பார். மேடையின்மேல் கருமையாக நிழல் விழுகிறது. என் மார்பு வெடிக்கிறது. தாங்கவில்லை. கண்ணாடியில் பார். இன்னும் எவ்வளவு தாமதம் ஆகுமோ?

பிரகிருதி

மாட்டேன், பார்க்க மாட்டேன். என் உள்ளத்தில், என் தியானத்தில் அவரைப் பார்ப்பேன். எதிரே

திடீரென்று வந்தால் பார்ப்பேன். இன்னும் கொஞ்சம் சகித்துக்கொள். கட்டாயம் காட்சி அளிப்பார், அம்மா! இதோ பார், திடீரென்று புயல் வரப்போவதை அறிவிக்கும் குறி. பூமி எப்படிக் கிடுகிடுவென்று ஆடுகிறது பார். மார்பு படபடவென்று அடிக்கிறது.

தாய்

அடீ பாவி! சாபத்தைத் தலைமேல் கட்டிக் கொண்டாயா? என்னைக் கொன்று விட்டாய். என் ரத்தக் குழாய்கள் யாவும் வெடித்து விட்டது.

பிரகிருதி

சாபமில்லை, சாபம் இல்லை! என் மறுபிறப்பு வருகிறது. மரண வாயில் திறக்கிறது. இடியின் சம்மட்டித்தாக்கலில் கதவு, தாழ்ப்பாள், என் வாழ்வில் தோன்றிய பொய்மைகள் யாவும் பொடியாகின்றன. பயத்தால் துடிக்கிறது என் இதயம். உயிர் ஆனந்தத்தில் ஊசல் ஆடுகிறது. அவர்தாம் என்னைப் பாழாக்கியவர்! என் உடல், பொருள், ஆவி எல்லாம் அவரே! அவர் வந்துவிட்டார்! நான் பட்ட அவமதிப்பின் மேலேயே அவரை உட்காரவைப்பேன் அவர் சிம்மாசனம் அங்கேதான். அழைப்பேன், என் லஜ்ஜையின் மூலம்—என் அச்சத்தின் மூலம். ஆம்.

தாய்

காலம் ஆகிவிட்டது எனக்கு. இனித் தாங்கேன், போய் உன் கண்ணாடியைப் பார், அம்மா, உடனே!

பிரகிருதி

பயமாக இருக்கிறதம்மா, அவர் வழி முடிந்து விட்டது. அப்புறம்? அதற்கப்புறம் நான். வேறு ஒன்று

மில்லை. இதனால் இவ்வளவு நாட்களாக நான் பட்ட வேதனை தீருமா? எதற்காக இவ்வளவு தூரம், இவ்வளவு கடுமையான வழியில் வரவேண்டும்? இதற்கு முடிவு எங்கே? நான் தானா இதற்கு முடிவு?

வழியின் முடிவெங்கே? மிருந்தது என்ன ?
இவ்வளவு ஆசையும் இவ்வளவு வினையும் எங்கே முடியுமோ ?
விம்மி எழும் அழுகையின் அலை ;
கவிந்திடும் பேர் இருள் எதிரே,
அக்கரை எங்கே ?
இந்தக் கானல் நீரை நம்பிச் சென்றால்
தாகம் அடங்காதே என்ற சங்கை தோன்றுது ;
மனத்துள் அச்சம் விளைகிறது.
சுக்கான் முறிந்து, சீலை கிழிந்து செல்லும் கலம் போல்
என் வேதனை உறைவிடமின்றி எங்கோ பாய்கிறது !

தாய்

அடீ படுபாவி! என்மேல் கருணை இல்லையா? எனக்குப் பொறுக்கவில்லையடி! போய்க் கண்ணாடியைப் பாரம்மா உடனே.

பிரகிருதி

(கண்ணாடியைப் பார்த்ததுமே அதை எறிந்து விட்டு) அம்மா! அம்மா! அம்மா! போதும். நிறுத்து! நிறுத்திவிடு! திருப்பிக்கொள், உன் மந்திரத்தை! திருப்பிக்கொள்! போதும் உன் மந்திரம். உடனேயே திருப்பிக்கொள்ளடி, உன் மந்திரத்தை! அடீ ராக்ஷஸி! என்ன செய்தாய்! என்ன செய்து விட்டாயடி! ஏனடீ நீ இன்னும் சாகவில்லை? என்ன தோற்றம்! அந்தச் சுடர்முகம் எங்கே? அதன் அழியாப்

பொலிவு எங்கே? எவ்வளவு துயரம்? எவ்வளவு களேப்பு? உள்ளத்துள் போராடித் தோல்வியுற்று முகம் தொங்கி வருகிருரே? போகட்டும், போகட்டும். இதெல்லாம் ஒழிந்துபோகட்டும்!

[காலால் பூஜா உபகரணங்களே இறைத்தவாறு]

அடீ! நீ உண்மையில் சண்டாளியாக இராவிட்டால் வீரனுக்கு அவமானம் நினேக்காதே! ஜயம் பெறட்டும் அவர்! வெற்றி உண்டாகுக அவருக்கு!

[ஆனந்தன் பிரவேசிக்கிருன்.]

என் பிரபு வந்துவிட்டார், என்னே உய்விக்க. அதற்காக எவ்வளவு துயரம் அடைந்தீர்கள் - மன்னித்து விடுங்கள். என் முடிவில்லா வேதனேயையும் கஷ்டத்தையும் உம் காலால் உதைத்தெறிந்துவிடும். உம்மை மண்மீது இழுத்து வந்தேன். இராவிட்டால் என்னே எவ்வாறு உம் புண்ணிய லோகத்திற்கு அழைத்துச் செல்வீர்? பரிசுத்தரே, உம் கால்களில் தூசு ஒட்டிக் கொண்டிருக்கின்றது. அது என்ன புண்ணியம் செய்ததோ, உம் காலில் இருக்க! என் மாயாமூடி அறுந்து விழட்டும், உம் கால் பட்டு; மாசுகள் நீங்கட்டும். ஜயம் பெறுவீராக!

தாய்

வெற்றி பெறுக நீர்! பிரபு! நான் செய்த பாவம், என் உயிர், இவை இன்று உம் காலின் கீழ் மடிகின்றன. என் நாட்கள் முடிந்துவிட்டன இங்கேயே! என் பிழை பொறுத்தருள்வீராக.

[சாகிருள்]

ஆனந்தன்

" புத்தோ ஸுஸுத்தோ கருணாமஹாண்ணவோ
யோச்சந்த ஸுத்தவ்வர - ஞானலோசனே !
லோகஸ்ஸ பாபூபகிலேஸ காதகோ
வந்தாமி புத்தம் அஹம் ஆதரேண தம் !"

ஓம் மணிபத்மே ஹும்

சார்தூல கர்ணுவதானம்

கவிகுரு ரவீந்திரரின் 'சண்டாளிகா' உலகத்துச் சிறந்த நாடகவரிசையில் வைக்கத் தகுதி வாய்ந்ததென ஐயமறக் கூறலாம். இந்தியாவில் பல இடங்களில், ஏன் வெளி நாடுகளிலுங்கூட, இந்தச் சிறு நாடகத்தை நடித்துக் காட்டியுள்ளனர். இதைப் பார்த்தபேர் உள்ளத்தில் இது மட்டிலா மகிழ்ச்சியை ஊட்டி இருக்கிறது.

சிறப்பெய்திய இந்த நாடிகையின் விஷயவஸ்து ஸம்ஸ்க்ருதத்தில் உள்ள மூல பௌத்த நூலான சார்தூல கர்ணுவதானம் (புலிச்செவியன் வரலாறு) என்பதன் முன்னுரையைத் தழுவியதாகும். இந்த அவதான நூல் மிகப் பழமையானது. குறைந்தது கி. பி. முதல் நூற்ருண்டை நெருங்கிய காலத்தில் தோன்றி இருக்கவேண்டும்.* எழுதியவர் இன்னுர் என்பது தெரியவில்லை. இதன் சுருக்கம் பின்வருமாறு :---

ஓம். மும்மணியை (புத்தன் - தர்மம் - சங்கம்) வணங்குகிறேன். எனக்குக் கேள்வி உண்டு: ஒரு சமயம் புத்த பகவான் ச்ராவஸ்தி நகருக்கு அணித்தான ஜேத

---

* இந்த அவதானத்திற்குச் சீனமொழியில் நான்கும், திப்பத்து பாஷையில் ஒன்றுமாக வழி நூல்கள் கிடைக்கின்றன. இவற்றுள் சீன மொழிபெயர்ப்பான ஒன்று கி. பி. 145-170-ஆம் ஆண்டுகளின் இடைகாலத்ததும், மற்றவை கி. பி. 222-ஆம் ஆண்டு தொடங்கி 316-ஆம் ஆண்டின் இறுதிக்குள் தொகுத்தனவுமாக இருக்கவேண்டும். மொழிபெயர்ப்பின் நடையை ஆராயுங்கால், மூலநூல் முதலாம் நூற்ருண்டிற்கும் முற்பட்ட காலத்ததாகவே ஊகிக்க இடந்தருகிறது.

வனத்தைச் சார்ந்த அநாதபிண்டர்களின் பூஞ்சோலை யில் தங்கி இருந்தாராம். நிறை செல்வனான பிக்ஷு ஆனந்தன், ஒருநாள் முற்பகலில் சீவர ஆடை பூண்டு கையில் கலத்துடன் பிக்ஷைக்காக ச்ராவஸ்தி நகரை நோக்கிப் புறப்பட்டான். மாதுகரம் எடுத்துப் புசித்துப் பசி ஆறியதும் தாகவிடாய் தீர்த்துக்கொள்ள நகர்ப் புறத்திலுள்ள ஒரு கிணற்றருகே வந்தான். அச்சமயம் பிரகிருதி என்ற சண்டாளஜாதிப் பெண் (மாதங்கி) அந்தக் கிணற்றில் நீர் சேந்திக்கொண்டிருந்தாள். ஆனந்தன் அந்தப் புலைமகளை நோக்கி, "தங்கச்சி! குடிக்கத் தண்ணீர் தா" என்றான். இதைக் கேட்டவுடன் உச்சி குளிர்ந்தவளாய்ப் பிரகிருதி, "பதந்தரே (தூயரே!) நான் புலைச்சியாயிற்றே" என்றாள் தயக்கத்துடன். அதற்கு ஆனந்தன், "பெண்ணே! நீ எந்தக் குலத்தவளென்று நான் கேட்கவில்லை. ஜலம் தா; அருந்துகிறேன்" என்றான். அப்புறம் பிரகிருதி ஆனந்தனுக்கு உவகையுடன் குடிக்கத் தண்ணீர் வழங்கினாள். புத்த பிக்ஷுவும் நீர்நசை அடங்கியதும் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

ஆனந்தன் போய்விட்டான். ஆனால் இளம் புலைச்சியின் மனத்துள் பெரும்புயலைக் கிளப்பிவிட்டான். அவனது வடிவம், முகப்பொலிவு, கம்பீரமான குரல் யாவும் பிரகிருதியின் உள்ளத்தில் நிலைத்தன. அவள் அவன்மீது மயலுற்றாள். "ஆரிய ஆனந்தரே என் கணவர்'- இந்தப் பேதைமையே அவளை உருக்குலைத்தது. 'என் தாய் மந்த்ர வித்தையில் வல்லவள் (வித்யாதரி). அவள் சூன்யம் வைத்து எனக்கு ஆனந்தனைக் கொண்டு தருவாள்.'- இந்த ஒரு நம்பிக்கை அவள் மனத்துள் குருத்துவிட்டது.

நீர் மொண்டு கொள்ளாமல் வெறும் பானையுடன் வீட்டை அடைந்து அதை ஒரு மூலையில் எறிந்துவிட்டு, அன்னையிடம் சென்று, "அம்மா, மஹாச்ரமணரான கௌதமரின் சிஷ்யர் ஆனந்தரையே நான் மணந்து

கொள்ளப்போகிறேன். அவர் என் கைக்கு எட்டாத பொருள். உன் மந்திர சக்தியால் அவரை என்னிடம் இழுத்து வா'' என்றாள். அதற்குத் தாய், ''ஆனந்தரை வசியம் செய்யமுடியும். ஆனால் கோசல ராஜா ப்ரஸேன ஜித் கௌதமரிடம் நெருங்கிய பற்றுடையவனாயிற்றே. அவனுக்கு இந்த விஷயம் தெரிந்தால் நம் குலத்திற்கே கேடு விளையுமே. இது மட்டுமன்று; கௌதமர் செற்றம் நீங்கிய மனிதரென்று கேள்விப்பட்டிருக்கிறேன். இத் தகையோர் எதிரே எந்த மந்திரமும் பலிக்காதே'' என்றாள். அன்னை எவ்வளவு சொன்னபோதிலும், மகள் தன் பிடியை விடாமல், ''கௌதமர் மாசறு குணத்தவராய் இருக்கலாம். ஆனால் அவரிடமிருந்து நான் இந்த ஆனந் தரைப் பெறுதுபோனால், என் உயிரைத் துறப்பேன். இதுதிண்ணம்'' என்றாள்.

அச்சத்தைவிட அன்பிற்குரிய சக்தி அதிகம். ''நீ இறந்துபோக நான் பார்ப்பேனோ? ஆனந்தரை உனக்குக் கொண்டு தருவேன்'' என்றாள் அன்னை. இதற்கப்புறம் அந்தப் புலைக்கிழவி மந்திர வித்தையைக் கையாண்டாள். வீட்டு முற்றத்தைச் சாணத்தால் மெழுகி, களம் அமைத் தாள். நடுவில் மேடையொன்று எழுப்பி இழைகோலம் இட்டாள். தருப்பைப்புல்லினால் அதற்குக் காப்பு வரைந் தாள். ஓமத்தழலை வளர்த்தாள். அதில் நூறு எருக்க மலர்களை ஒவ்வொன்றாகப் போட்டு மந்திர உச்சாடனம் செய்தாள். அவள் வைத்த 'ஏவல்' பலன் அளித்தது. தொலைவிலிருந்த ஆனந்தனின் சித்தம் கலைந்தது. அவன் பௌத்தப் பள்ளியிலிருந்து புலைச்சேரியை நோக்கி விரைந்தான். மந்திரம் இழுத்தது அவனை. சேரிக்கோடி யில் அவனை நெருங்குவதைப் பார்த்ததுமே தாய் பிர கிருதியை விளித்து, ''அதோ வருகிறார் உன் உள்ளம் கவர்ந்தவர். போய் மெல்லணையைப் பரப்பு'' என்றாள். பிரகிருதி மெய்சிலிர்த்திட ஓடினாள், ஆனந்தனுக்கு அமளி

விரிக்க. இதற்குள் ஆனந்தனும் களத்தின் முன்னே வந்து நின்றான். அவன் இரு கண்களிலிருந்தும் நீர் அருவியெனப் பெருகியது. கம்பலையுடன், "நெறி தவறிவிட்டேனே, பகவான் புத்தர் ஏன் இவ்வாறு என்னைச் சோதிக்கவேண்டும்?" என்று ஆனந்தன் நெக்குருகினான். புத்தர்தம் மனக்கண்ணால் இதை அறிந்து அவனைத் தம்பால் இழுத்துக்கொண்டார்.

ஆனந்தன் புலைச்சியின் குடிலைவிட்டு அகன்று விஹாரத்தை நோக்கிச்செல்வதைப்பார்த்துப் பிரகிருதி அன்னையை அணுகி, "அம்மா. இதென்ன, பிக்ஷு போய்விடுகிறாரே?" என்றாள். அதற்கு அவள் தாய், "சித்தார்த்தரின் மந்திரம் என் மந்திரத்தைவிடப் பலமுடையது. வேறு வழி இல்லை" என்றாள்.

இந்தப் பக்கம் மருள் விலகி ஆனந்தன் பகவான் அருகில் வந்து அவருடைய மலர்ப்பாதங்களை எடுத்துத் தன் தலைமீது இருத்தினான். அச்சமயம் அறவாழி அந்தணர் (புத்தர்), "ஆனந்தா, உனக்கு ஷடாக்ஷரி வித்தையைச் சொல்லித் தருகிறேன். உனக்கு இடுக்கண் வரும்பொழுது இது பயன்படும். பிறருக்கும் இதனால் நீ நன்மை புரியலாம். இதற்குள்ள வன்மை அளவிடற் கரியது; செய்ய முடியாததை இது செய்து காட்டும்" என்றார்.

புலைப்பெண் மட்டும் ஆனந்தனை மறக்கவில்லை. அவளது உள்ளம் அவன்மீது படர்ந்து காதலினால் பொங்கி வழிந்தது. ஒவ்வொருநாளும் புலர்வேளையில் நகரவாயில் அருகே நின்றுகொண்டு பிச்சைக்கு வெளியே செல்லும் ஆனந்தனைக் கண்ணால் கவர்ந்து செல்வாள். 'இந்த வழிதானே அவர் வருவார்?' என்ற நம்பிக்கையினாலேயே அவள் உயிர் வைத்திருந்தாள். ஆனந்தன் உண்கலத்துடன் நகரை நோக்கி வந்துகொண்டிருந்தான். புலைமகளும் அவனைப் பின்தொடர்ந்தாள். அவன் நின்றால் அவளும் நிற்பாள். அவன் அமர்ந்தால் அவளும் அமர்

வாள். பிக்ஷைக்காக வீடுதோறும் அவன் நுழையும்போது வாயிற்படியில் மௌனமாகக் காத்திருப்பாள்.

ஆனந்தன் இதைக் கவனிக்காமல் இல்லை. மனத்துள் வேதனை மூண்டு சீக்கிரமாகவே ச்ராவஸ்தி நகரைவிட்டு ஜேதவனத்தை அடைந்தான். அங்கே புத்தபகவானின் சரணங்களைத் தொட்டுத் தன் குறையைச் சொல்லிக் கொண்டான். "ஐயனே, என்னை இந்த மாயையிலிருந்து காத்தருள்வீர். ஹே ஸுகத, என்னைக் கைவிடாதீர்" என்று அழுதான். பகவான் அவனுக்கு உறுதி தர, "அஞ்சேல்" என்றார்.

அப்பால் ஒரு நாள் சித்தார்த்தர் மாதங்கியின் பெண்ணான பிரகிருதியை அழைத்து, "எதற்காக அம்மா, ஆனந்தன் பின்னால் சுற்றுகிறாய்? உனக்கு அவனால் என்ன ஆகவேண்டும்?" என்றார். கரவற்ற அந்தப் புலை மகள் தயக்கமின்றி, "தூயனே, ஆனந்தரைக் கணவராகக் கொள்ள நான் தவம் கிடக்கிறேன்" என்றாள். "உன் தாய் தந்தையர் ஸம்மதித்தார்களா?" என்று பகவான் கேட்டதற்குப் பிரகிருதி, "ஹே ததாகத! அவர்களுக்கும் அது விருப்பமே" என்றாள். "சரி, அந்தமாதிரி அவர்கள் என் முன்னால் வந்து சொல்ல வைப்பாய்" என்றார்.

பிரகிருதி தன் பெற்றோரைக் கூட்டிக்கொண்டு புத்தர் முன்னால் வந்தாள். அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டார். கூச்சமின்றி அவர்களும் தம் விருப்பத்தைச் சொன்னார்கள். "பிரகிருதியை இங்கேயே விட்டுவிடுங்கள்" என்றார் புத்தர். அவரது கட்டளையை மீறாமல் அவர்கள் புத்தரைத் துதித்துக்கொண்டே சேரிக்குச் சென்றனர். பகவான் பிரகிருதியை நோக்கி, "உண்மையில் ஆனந்தனிடம் ஆசை உனக்கு உண்டா?" என்றதற்கு, அவள், "அவரை நான் வரித்துவிட்டேன்" என்றாள். "அப்படியானால், ஆனந்தன் கடைப்பிடிக்கும்

வழியிலேயே நீயும் செல்லவேண்டும். இந்தா சீவர ஆடை; அணிந்துகொள்'' என்றார். அந்தக் கணமே பிரகிருதி, "தங்கள் சித்தம், என்னையும் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளும். நானும் அவர் கொண்டிருக்கும் ஒழுக்கத்தை மேற்கொள்வேன்'' என்றாள்.

பிறகு புத்தபகவான், இழிகுலத்தில் பிறவி எடுப்ப தற்குக் காரணமான ஜன்மாந்தர பாபங்களைப் போக்கி, பிரகிருதியைப் புனிதமாக்கி, "ஹே பிக்ஷுணி! நீ பிரம்ம சரியத்தைக் கைக்கொள்வாய்'' என்றார்.

இதை வணக்கத்துடன் கேட்டு, பிரகிருதி தன் கூந்தலை மழித்துக் காவிஉடை பூண்டாள்.

புத்தபகவான் அந்தப் புலைச்சிக்குத் தம் கொள்கை யைப் புகட்டினார். படிப் படியாக, மேலுக்குமேல் ஆழ்ந்த சமயக் கோட்பாடுகளை உணர்ந்து, அறிவுக்கண் விழிப் படைய, ஆனந்த போதங்கொண்டு பிரகிருதி, "ஐயனே! நான் அறிவிலி, ஒன்றும் தெரியாத சிசு. ஆனந்தரைக் கணவராகக் கொள்ள நினைத்தேனே, என்ன மடமை! இன்று அநீதத்தை அநீதத்தின் உருவிலேயே காண்கி றேன். நான் செய்த தீமையை, தீமையென்றே பகவனும் நோக்கவேண்டும்'' என்றாள்.

புத்தன் அதற்கு, "பிரகிருதி, தனக்கென வாழாமல் பிறர்க்கே உரியராய் இருப்பதே நல்லறமாகும். இதுவே நீ செல்ல வேண்டிய பாதை; அறிவாய்'' என்றார்.

இந்த வழியில் அந்தப் புலைப்பெண் பிக்ஷு ஆனந்தன் பால் பிரியாக் காதல்கொண்டு, தன் விருப்பம்போல், தெளிந்த சிந்தையுடன் தன் உயிர்க்குரியாளன் ஒழுகும் தவ நெறியையும் அசையாத பிரம்மசரிய நோன்பையும் மேற்கொண்டாள். பகவனும் அவளைப் பிக்ஷுணிகளின் சமூகத்தில் ஒருத்தியாக ஆக்கினார்.

இதனால் பெருங் கலக்கம் மூண்டது. ஸமூகம் இவளை அவ்வளவு எளிதில் ஏற்றுக் கொண்டால்தானே?

புலைச்சி சங்கத்தில் சேர்ந்துவிட்ட செய்தி பார்ப்பன ரிடையே பெரும் பரபரப்பை உண்டாக்கியது. "என்ன விந்தை இது! சண்டாளன் பெண்ணு பிரம்மசரியம் பூணுவது? அந்தணர், க்ஷத்திரியர் இவர்கள் வீடுகளில் அவள் நுழைவதா? "என்று பொறுமினர். அரசன் ப்ர ஸேனஜித்தும் திடுக்கிட்டு நின்ருன். "தீண்டாதார் குலத்தைச் சேர்ந்த இவள் எங்ஙனம் நம் இல்லங்களில் புகுவாள்?" என்ருன்.

பயங்கரமான விஷயந்தான், புலைப்பெண் உயர் வகுப்பினர் ஸமூகத்தில் புகுவது! வேந்தன், பார்ப்பனர் புடைசூழ தேர் ஊர்ந்து ஜேதவனத்திற்கு வந்தான். அரசனும் அருமறையோரும் புத்தன் கழலடியில் தாழ்ந்து வணங்கினர். பல விசித்திரமான கேள்விகளைப் பொழிந்தனர் ததாகதனை நோக்கி. சிலர் பொறுமை இழந்தவராய் முணுமுணுத்தனர்.

பகவனுக்கு இவர்கள் வந்த காரணம் புரியாமல் இல்லை. பிக்ஷுகணங்களையும் அங்கே குழுமியிருந்த மற்றவர்களையும் விளித்து அவர், "இந்தப் பிக்ஷுணியின் பூர்வ ஜன்ம வரலாற்றைக் கேட்க உங்களுக்கு ஆவல் இருந்தால், சொல்லுகிறேன். கேளுங்கள், அந்த விசித்திர விருத்தாந்தத்தை" என்ருர்.

கூடியிருந்த 'அத்தனைபேரும் தம் சம்மதத்தை வெளிப்படுத்தவே அவர் கூறப் புகுந்தார்.

"முன்னொருகாலத்திலே கங்கையாற்றின் கரையில், மா, பெண்ணை, வாழை, பாதிரி, நெல்லி மரங்கள் அடர்ந்த காட்டகத்தில் ஆயிரம் மாதங்கருடன் அவர்களுடைய தலைவன் த்ரிசங்கு என்பவன் ஆட்சி செலுத்திவந்தான். அந்தப் புலை மன்னனுக்கு அவனது முற்பிறப்பைப் பற்றிய நினைவு உண்டு. அவன் இழிகுலத்தவனுனுலும், சொல்லரும் காட்சியைக் கண்டு தெளிந்த உத்தமன். அவன் இடைவிடாமல்

வேதத்தின் ஆறு அங்கங்களையும் பயின்றான். சாஸ்திரம், கலை இவற்றின் ஆழத்தை அறிந்தவன். அந்தப் புலைவேந்தனுக்குச் சார்தூல கர்ணன் என்ற பெயருடைய கண்ணுக்கு இனிய சாயலானும், உள்ளத்தில் நல்ல உரனுடையவனுமான மகன் வாழ்ந்து வந்தான். மாதங்கர்களின் ராஜா, தன் ஒரே மகனுக்குத் தெரிந்த வித்தைகள் யாவும் பயில்வித்தான். இளஞ் சார்தூல கர்ணன் கற்றறியாத நூலே மேதினியில் இல்லை எனலாம். அவனுக்கு ஏற்ற ஒரு கன்னிகையைத் தேடி அலைந்தான் அரசன். ஒத்த பண்புடைய பெண் புலையருள் அகப்பட்டால்தானே? என்ன பண்ணுவான், பாவம்! அச்சமயம் புஷ்கரஸாரீ என்ற கல்விக்களஞ்சியமான பிராம்மணன், வடகிழக்கு நாட்டின் அரசனான அக்கினிதத்தன் சதுர்வேதி மங்கலமாக அளித்த உத்கடமென்னும் நானூறு கிராமங்களை ஆண்டு அனுபவித்துவந்தான்.

" அவனுக்கு ஒரு பெண். அவள்பெயர் பிரகிருதி. நல்ல அழகோடு நற்குணங்களும் பொருந்தியவள். த்ரிசங்கு பார்த்தான்; 'இந்தப் பார்ப்பனப் பெண்தான் சார்தூல கர்ணனுக்கு ஏற்ற மனைவியாவாள்' என்ற உறுதிக்கு வந்தான். ஒரு நாள் பொழுது புலர்வதன் முன் மாதங்க ராஜா த்ரிசங்கு, தூவெண்மையான, வடவைக்கனலால் இயக்கும் ரதத்தில் ஏறி, நாய் அடித்துண்ணும் தன் சுற்றத்துடன் உத்கட வனத்தை நோக்கிப் பயணமானான்.

" பல்வேறு விருக்ஷங்கள் செறிந்த, கவின் தரும் பூக்கள் மலிந்த, விசித்திரப் பறவைகள் கூவிடும், விண்ணுலகப் பூங்காவை நிகர்த்த அந்த இருஞ்சோலையினுள் நுழைந்தான். உள்ளத்தை அள்ளும் அவ்விடத்தை நண்ணியதும் அரசன் பிராம்மண புஷ்கரஸாரியை எதிர்நோக்கி இருந்தான். மாணவர்களுக்குப் பாடம் ஓத, அவ்விடம் அந்தணன் வருவானென்று மாதங்க ராஜாவுக்குத் தெரியும்.

"கடைசியாக, அந்தி மங்கும்போது பார்ப்பன புஷ்கரஸாரி ஐந்நூறு வித்யார்த்திகளுடன் உத்கட வனத்திலிருந்து வெளியே வந்தான்.

"மாதங்கராஜா த்ரிசங்கு, முளைத்தெழும் கதிரவனைப் போல், சுடர்விடும் கனலைப்போல், மறையோர் கவிந்த வேள்வியைப்போல், அமரர் சூழ்ந்த இந்திரனைப்போல், மூலிகை மலிந்த இமயம்போல், நித்திலம் பிறக்கும் நீலக் கடல்போல், விண்மீன் தொடர்ந்த மதியம்போல், இயக்கர் கின்னரர் போற்றும் குபேரனைப்போல், முனிவர் தொழும் அயனைப்போல் அந்த அந்தணனிடம் தொலைவிலிருந்தவாறே தன் வரவைத் தெரிவிக்க, 'ஸ்வாகதம்! ஓய் புஷ்கரஸாரீ! வரவேணும். தங்கள் வரவு நல்வரவு ஆகுக!' என்ருன்.

"இதைச் செவியுற்றுப் பிராம்மண புஷ்கரஸாரி, 'ஏய் த்ரிசங்கு! பிராம்மணனை நீ ஓய் என்று கூப்பிடுவது அடுக்காத காரியம்' என்ருன். அதற்கு த்ரிசங்கு, 'ஏ புஷ்கரஸாரீ! ஓய் என்றதனுல் தவருென்றுமில்லை. உன்னை இழிவுபடுத்தியது ஆகாது. இப்பொழுது நான் வந்த காரியத்தைச் சொல்லுகிறேன் கேள். எந்தவிதமான செயலுக்கும் நாலுவிதமான அவசியம் இருக்கும்: தன் அவசியம், பிறன் நிமித்தம், தமருக்காக, எல்லார் பொருட்டும். நான் வந்த மகத்தான காரியத்தின் கருத்தைக் கேட்பாய். என் மகன் சார்தூல கர்ணனுக்கு பெண் தேட வந்தேன். உன் மகள் பிரகிருதியை அவனுக்கு மணந்துகொள்ள அனுமதி தா. உன் குலத்திற்கு உவந்த, உன் நிலைக்கேற்ற கன்யா சுல்கத்தைக் கூச்சமிராது கேள், தருகிறேன்' என்ருன்.

"இதைக் கேட்டவுடன் வேதங்களை கரைத்துக் குடித்த புஷ்கரஸாரியின் மனம் எப்படிக் கொதித்திருக்கும்? அவனுடைய கண்கள் சிவந்தன. உதடு துடித்தது. நெற்றிக் குவட்டில் நரம்பு ஊதியது. கீரிப்

பிள்ளை வெம்மையுடன் நோக்குவதுபோல த்ரிங்சகுவைப் பார்த்து வன்மை பாய்ந்த குரலுடன், 'தூ தூ, அட சண்டாளா! உனக்கென்ன கேடுகாலமா? இழிகுலத்தில் தான் பிறந்தாயே, வேத நெறியில் செல்லும் பிராம் மணனை நீ அவமானப்படுத்த இவ்வளவு தூரம் வந் தாயா? எண்ணத் தகாததை நீ எண்ணுகிறாய்; காற்றை நீ கயிற்றால் கட்டப் பார்க்கிறாய். நீ எல்லாருடைய தயைக்கும் பாத்திரமானவன், அதமன், தீண்டத்தகாத வன், சண்டாளன், ஆவுரித்துத் தின்னும் புலையன்; நாயை அடித்துப் புசிப்பவன், விலகிப் போடா! என்னை வருத்த ஏன் இங்கே வந்தாய்?' என்றான்.

"பதறாமல் இதற்கு த்ரிசங்கு, 'ஏ புஷ்கரஸாரீ பார்ப்பான், பிறஜாதி இவர்களுக்கிடையே வித்தியாசம் இருப்பதாக எனக்குப் புலப்படவில்லை. ஒளிக்கும் இரு ளுக்கும், புழுதிக்கும் பொன்னுக்கும் ஏராள வித்யாசம் தென்படுகிறது. ஆனால் பிராம்மணனுக்கும் புலையனுக் கும் இந்தமாதிரி ஒரு வேற்றுமை காணவில்லையே? ஆகாசத்திலிருந்து தொப்பென்று குதித்துவிட்டார்களா இந்தப் பிராம்மணர்? பூமியினுள்ளிருந்தும் திடுமெனத் தோன்றவில்லை. இவர்கள் புலையரைப் போன்றே யோனி ஜர்கள். பிறக்கும்பொழுது எல்லாரும் ஒரு குலத்தவரே. சாகும் தறுவாயில் அனைவரும் ஒன்றே. புலையர்களை ஒதுக்கிவிடுவது போலவே பிராம்மணப் பிணங்களையும் யாரும் தீண்டுவதில்லை. அதைத் தொடுவது அசுசியாகும்.

"'பிராணி உலகில் ஹிம்ஸையையே குறியாகக் கொண்ட கொடூரமானதும் பாபம் நிரம்பியதுமான விதிகளை இந்தப் பார்ப்பனரே வகுத்து இருக்கின்றனர். இவர்களுக்குப் புலால்மீது நசை உண்டாகும்பொழுது உடனேயே மந்த்ர பூர்வமாகத் தேவர்களுக்கு பிரியமான அஜமேதம் (ஆட்டுக்கிடா பலி) செய்து ஸ்வர்க்கத்தை எய்துங்கள் என்பார்கள். ஸ்வர்க்கத்திற்குச் செல்லும்

பாதை இவ்வளவு எளிதானுல் ஏன் அவர்கள் தம்மையோ, தம் உறவினரையோ தேவதைகளுக்குப் பலியாகக் கொடுப்பதில்லை? இவ்வாறு செய்தால் தம் தாய்தந்தை யரை, உற்ருர் உறவினரை, பெண்டு பிள்ளைகளை மொத்த மாக அந்தப் புத்தேள் உலகிற்கு அனுப்பிவிடலாமே! பாவம், வாயில்லாப் பசுக்கள் மட்டுமா ஸ்வர்க்க வாழ்வை எய்தவேண்டும்? அவற்றின் நன்மையைக் கோரி இந்த யாக யக்ஞங்கள் செய்கிறீர்கள். வேள்விக் குழியில் நீங் களே விழுங்களேன்? ஓய் ஐயரே! இது ஒருபோதும் உம்மை ஸ்வர்க்க வாயிலுக்குக்கூடக் கொண்டுவிடாது. புலால் உண்ணவேண்டியே பிராம்மணர்கள் சூழ்ச்சி செய்திருக்கிருர்கள்; வேறென்றுமில்லை. இதோ பாரும், ஸ்வாமி! பார்ப்பனன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற பாகுபாடு பொருளற்றது. இவர்களிடையே யாதொரு வித்தியாசமும் எனக்குத் தெரியவில்லை. எல்லா வகுப்பும் ஒன்றெனஅறிந்து என் மகனுக்கு உம்முடைய மகளைத் தாரும். அதற்கு ஏற்ற கன்னிப் பணமும் நான் உமக்கு அளிப்பேன்' என்றுன்.

"இதைக் கேட்டதும் பிராம்மண புஷ்கரஸாரிக்கு அடங்காச் சினம் பொங்கிவந்தது. 'ஒரு பிராமணன். பிராம்மண. க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்ற நான்கு வர்ணத்திலும் பெண்களை மணந்துகொள்ளலாம். ஒரு க்ஷத்திரியன், க்ஷத்திரிய, வைசிய, சூத்திரப் பெண்களைக் கொள்ளலாம்; ஒரு வைசியன் வைசிய, சூத்திர மகளிரைக் கட்டிக்கொள்ளலாம்; ஒரு சூத்திரன் தன் ஜாதிப் பெண்ணையே மணந்து கொள்ளவேண்டும். இவ்வாறு சாஸ்திரம் சொல்லுகிறதடா. பிரம்மாவின் முகத்தி லிருந்து பிராம்மணனும், அவரது புஜத்திலிருந்து க்ஷத்திரி யனும், அவரது வயிற்றிலிருந்து வைசியனும்; கால் களிலிருந்து சூத்திரனும் உருவெடுத்தார்கள். இந்த நான்கு வர்ணத்தில் கடைசி வகுப்பைக்கூட நீ சேர்ந்தவ

னன்றே. கடைகெட்ட பஞ்சமனுயிற்றே! அடிமையான நீயோ பிராம்மணனுடைய பெண்ணுக்கு ஆசைப்படுகிருய்? நீ சீக்கிரமே அழிந்துபோவாய்!' என்ருன்.

அப்பால் மாதங்கராஜா த்ரிசங்கு, 'ஏ, பிராம்மணோத்தமரே! உம் வர்ண வேறுபாடு எத்தகையதென்று சொல்லுகிறேன். கவனமாகக் கேளும். சிறுவர்கள் தெருப் புழுதியில் விளையாடுகிருர்கள். அந்தப் புழுதியைப் பிசைந்து சிறுவருள் ஒருவன், இது வெல்லக்கட்டி என்கிருன். இன்னொருவன் வெள்ளரிக்காய் என்கிருன். மற்ருெருவன் மீன் என்கிருன். வேருெரு பிள்ளை வடை என்கிருன். சிறுவர்கள் மண் உருண்டையைத் தின்பண்டமாகப் பாவித்தபோதிலும் மண் மண்தானே? அதேபோல் இந்த நான்கு வர்ணமும். மனிதன் எவனுமே ஒரேவிதமான தேக உறுப்புக்களுடன் பிறக்கிருன். மயிர், கண், மூக்கு, மோவாய், தோள், பக்கம், முதுகு, வயிறு, தொடை, குறி, கை, கால், நகம், குரல், நிறம் இவை போன்ற விஷயங்களில் விபரீதமான மாறுதல்கள் இருப்பதாகத் தெரியவில்லை. மாடு, குதிரை, கழுதை, ஒட்டை, மான், பறவை யாவும் ஒன்றுக்கொன்று வித்தியாசமுள்ளவை. இந்த மாதிரி வேறுபாடு நான்கு வர்ணத்தாரில் இல்லையே.

"'இன்பம் துன்பம், ஐம்புலனின் நுகர்ச்சி, ஊண், விளையாட்டு, உறக்கம், மல மூத்திராதி போன்ற நிலைகளிலும் வித்தியாசம் காணவில்லை. ஆகவே, ஜாதி ஒன்றேயொழியநான்கல்ல. நாலு வர்ணத்தார் என்பது மனிதனே செய்துகொண்ட பிரிவு. புஷ்கரஸாரீ! உம்முடைய அழகிய பெண்ணைச் சார்தூலகர்ணனுக்குக் கொடுத்தால் ஒன்றும் முழுகிப் போகாது. உமக்கு வேண மரியாதை செய்வேன்' என்ருன்.

"இந்தத் தடவை பிராம்மண புஷ்கரஸாரிக்குக் கோபம்வரவில்லை. அவன் உள்ளத்தில் கிளர்ச்சி மூண்டது.

சாந்தமாகவே புலே அரசனை நோக்கி, 'நீர் வேதங்களைப் பார்த்திருக்கிறீர்களா? ஆத்மவித்தை, மிருகசக்கரம், நக்ஷத்திரவித்தை, கணிதம், லோகாயதம், நியாயம், எல்லாம் பழக்கம் உண்டா?'' என்று கேட்டான்.

"அதற்கு த்ரிசங்கு, 'புஷ்கரஸாரீ! நான் எல்லா வித்தைகளையும் பயின்றவன். ஐயம் தெளிந்தவன். இதோ பாரும்: ஆதியில் ஒரே வர்ணத்தார்தாம் இருந்தார்கள். அப்போது பிராம்மணன், பறையன் என்ற வித்தியாசமே எவர் மனத்துள்ளும் முளைக்கவில்லை. அவரவர்கள் தொழிலினால் இந்தப் பேதம் ஏற்பட்டது. இல்லறத்தை ஒரு பெரும் பணியெனக் கருதி, முள்ளென வெருவி, அரண்யங்களில் குடிபுகுந்து பாரமார்த்திக (வீடுபெற) விஷயங்களைக் குறித்துத் தியானம் செய்ய முயன்றவர்களைத்தான் பிராம்மணர் என்று குறிப்பிட்டனர். காடு வயல்களைக் காக்க அம்பும் வில்லுமாகச் சுற்றித் திரிந்தோரே க்ஷத்திரியராவார்கள். முன் யோசனை பேரில், உரிய காலத்தில் உழைத்துப் பொருளீட்டியவரே வைசியர். வேறுவிதமான தொழில்களில் ஈடுபட்டவர்களே சூத்திரர்கள்' என்றான்.

"இதற்குமேல் எவ்வளவோ புதுமையான விஷயங்களைப்பற்றி த்ரிசங்கு புஷ்கரஸாரிக்கு அறிவித்தான். பிராம்மணன் கேட்டு வியப்புற்றான்.

"அப்புறம் த்ரிசங்கு சொன்னான்: 'ஓ பிராம்மணரே! ஒரு வேளை உம்முடைய செல்வப் பெண்ணுக்கு என் மகன் தகுந்த வரனாவானா என்று நீர் சந்தேகப்படலாம். அந்தத் தயக்கம் வேண்டாம். என் மகன் தூயன்; நல்லொழுக்கம் உள்ளவன், அறவழியில் செல்வோன். கருணை நிரம்பியவன். வேள்வியில் பசுபலி செய்தால் ஸ்வர்க்கம் ஒருபோதும் கிட்டாது. ஊக்கம், ஒழுக்கம், தவம், தியாகம், கல்வி கேள்வி, இவையே ஸ்வர்க்கத்திற்கு வழி காட்டும். என் மகனிடத்தில் இந்த அரிய பண்புகள் காண

லாம். சம்பந்தம் வைத்துக் கொள்ளுங்கள். புலையர்களான நாங்கள் அப்படி ஒதுக்கி வைக்கவேண்டிய பாவிகள் அல்ல.'

"இதற்கு யாதொரு விடையும் தரவில்லை புஷ்கரஸாரி. முகம் தொங்க மௌனமாக இருந்தான். இதைக் கவனித்து த்ரிசங்கு, 'பிரம்மாவின் வாயிலிருந்து பிராம்மணன் வந்தான் என்பதெல்லாம் வெறும் கதை. அப்படிச் சொல்வது பெருந் தவறு. அது உண்மையானால் பிராம்மணனும் அவனுடைய பிராம்மண மனைவியும் உடன் பிறந்தவராவார்களே. சகோதரர்களான இருவர் உடல் உறவு வைத்துக்கொள்வது மிருகதர்மம் அல்லவா? மனித இயல்புக்கு விரோதமாயிற்றே! எங்கள் சண்டாள குலத்திலும் வேதங்களைக் கண்டறிந்த எத்தனையோ விற்பின்னர்கள் தோன்றியுள்ளனர். உங்களுடைய ரிஷி குலத்தில் எத்தனையோ பார்ப்பனர் அல்லாதவர், ஏன் புலைப் பெண்கள் கூட, ரிஷிபத்தினிகளாக விளங்கியுள்ளனர். அருந்ததி யாராம்? கபிஞ்ஜலரின் தாய் சண்டாளப் பெண். மகாதேஜஸ்வியான த்வைபாயனரின் அன்னை செம்படவச்சி. க்ஷத்திரிய மகளான ரேணுகை பிராம்மண பரசுராமனை ஈன்றெடுத்தவள். ஆகவே, நீர் யோசனை செய்யவேண்டாம். பெண்ணைக் கொடும்' என்றான்.

"புஷ்கரஸாரி எவ்வளவோ சந்தேகங்களை, த்ரிசங்குவைக் கேட்டுத் தெளிந்துகொண்டான். கோத்திரத்தை வினவியபோது த்ரிசங்கு, காயத்ரியின் உற்பத்தியையும் ஒவ்வொருவருக்கும் தனித்தனியான காயத்ரி மந்த்ரம் உண்டென்பதையும் வெளிப்படுத்தினான்.

"இந்தச் சர்ச்சை யாவும் முடிந்தபின்னர் மாதங்க ராஜா, சொன்னான்: 'நான் முற்பிறப்பை உணர்ந்தவன். பல ஜன்மங்களின் வரலாறு இன்றும் என் மனத்துள்

பதிந்திருக்கிறது.' இவ்வாறு தன் பூர்வ ஜன்ம கதையை புஷ்கரஸாரிக்கு எடுத்துரைத்தான்.

"அப்பொழுது பிராம்மண புஷ்கரஸாரி, 'மகாஞானி நீர்; மனிதருள் உத்தமர்; உயர்ந்த வேதியர். மனப்பூர்வமாக உம்முடைய சார்தூலகர்ணனுக்கு என் கண்மணியான பிரகிருதியைக் கன்யாதானம் செய்து கொடுக்கிறேன்' என்றான்.

"இதைச் செவியுற்றதும் பக்கத்திலிருந்த அந்த ஐந்நூறு மாணவர்களும் பெருங் குரலெடுத்து, 'ஆசிரியரே! வேண்டாம், வேண்டாம்! அநியாயம் இது! அளவற்ற பிராம்மணப்பிள்ளைகள் இருக்கையில் சண்டாளனுடைய மகனுக்கு உம் புதல்வியைப் பறி கொடுப்பதா? என்ன வெட்கக்கேடு!' என்றனர் கண்கள் சிவக்க.

"அவர்களுடைய பேச்சைப் புஷ்கரஸாரி எடுத்துக் கொள்ளவில்லை. 'ஜாதியைக் குறித்து த்ரிசங்கு சொன்னது அவ்வளவும் உண்மையே. தொழிலே இயக்கவே ஸர்வ ஜீவன் எல்லாவித யோனியிலிருந்தும் வெளிப்படுகிறான். எந்த உயிரும் (ஆகாயம்) காற்றிலிருந்து உருவாகாது. எல்லா வர்ணத்தாரிலும், கூன், குருடு, ஊமை, செவிடு இருப்பதைக் கவனியுங்கள். நகம், தோல், மயிர் எல்லாருக்கும் ஒரேமாதிரிதான் இருக்கின்றன. மலமூத்திரங்களிலும் ஒரேவிதம். இன்ப துன்பமும் அதுபோலவே. ஆகவே வர்ணம் ஒன்றே! தொழில்தான் பிரதானமானது! இந்த மாதங்க ராஜா பெரிய ஞானி; சாஸ்திரத்தின் கரையைக் கண்டவர்; பரந்த நோக்குடையவர். இவருடைய பிள்ளையான சார்தூலகர்ணனுக்கே என் பெண் ஏற்றவள்' என்று கூறி முடித்தான். சார்தூலகர்ணனுக்கும் பிரகிருதிக்கும் விவாகம் நடந்தேறியது."

உபாக்கியானத்தை நிறுத்தியதும் புத்தபகவன், "பிக்ஷுக்களே! பூர்வஜன்மத்தில் நானே அந்த மாதங்க ராஜா. சாரத்வதிபுத்ரன் (சாரிபுத்ரன்) யாரென்றால் இந்தப்பிராம்மண புஷ்கரஸாரியே. ஆனந்தனே சார்தூல கர்ணன். இந்தப் புலைச்சிதான் புஷ்காரஸாரியின் கன்னிகை பிரகிருதி. ஆனந்தனுக்கும் பிரகிருதிக்கும் உள்ள இந்தத் தொடர்பு ஜன்ம ஜன்மாந்தரமாக வந்துகொண்டிருக்கிறது. பிறப்பிடைக் கொண்டுஞ் சிறப்பொடு பெருகி நெஞ்சில் பின்னி நீங்கல் செல்லா அன்பு இது

பூர்வகேன நிவாஸேன ப்ரத்யுத்பன்னேன தேனச
ஏதேன ஜாயதே ப்ரேம, சந்த்ரஸ்ய குமுதோ யதா

(முற்பிறப்பும் இப்பிறவியும் இணைந்தே இந்தக் காதல் பிறக்கும், ஆம்பல்மீது அம்புலிக்குள்ள பிடித்தம் போல.)

அப்புறம் பகவன் சதுரார்யஸத்யத்தையும் * அதைக் கடைப் பிடிக்கும் வழியையும் உரைத்தார். குழுமியிருந்த பிக்ஷுக்கள் அனைவரும் அவரது திருவாக்கைக் கேட்டு மகிழ்வெய்தினர்.

'பொருந்து போதியில்
இருந்த மாதவர்
திருந்து சேவடி
மருந்து மாகுமே.'

---

* துக்கம், துக்கத்தின் காரணம், துக்க நிரோதம் (துன்பம் துடைத்தல்), துக்க நிரோத பதம் (அகற்றும் வழி)

முற்றும்.

புயல்

மகாகவி டாகுர்

62 - அத்தியாயங்கள்

மொழிபெயர்ப்பு:— த. நா. குமாரஸ்வாமி, பீ. ஏ.

மலிவுப் பதிப்பு ரூ. 5—0—0 உயரிய பதிப்பு ரூ. 6—0—0

— புகழ்மொழிகளிற் சில —

ஆனந்த விகடன்: டாகுர் எழுதியுள்ள நவீனங்களுள் மிகச் சிறந்ததென்று கருதப்படும் "புயல்" என்ற காதற் கதை இப்போது வெகு அழகாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, உயர்ந்த முறையில் அச்சாகி வெளியாகி யிருக்கிறது. மனத்தை கவரும் விதமாக பைண்ட் செய்யப்பட்டிருக்கும் இப்பிரசுரம் புத்தகசாலை களிலும் ஒவ்வோர் இல்லத்திலும் இருக்கவேண்டிய அரிய பொக்கிஷ மாகும்.

சக்தி: இனிமையும் தெளிவும் இய்ல்புமான தெள்ளிய நடையில் மொழிபெயர்த்திருக்கிறார் அன்பர் குமார சுவாமி. அச்சும் பதிப்பும் அருமையா யிருக்கின்றன.

ஹிந்துஸ்தான்: அற்புதமான நவீனம் 'புயல்'. அமிர்தம் போன்ற தமிழ்நடை டாகுரின் நவீனத்தைச் சிறப்புறச் செய்கிறது. மனத்துக்குத் திருப்தியளிக்கும் ஒப்பற்ற நவீனம்.

பாரததேவி: ஒவ்வொரு புத்தகசாலையிலும் வீட்டிலும் இருக்க வேண்டிய அரிய பொக்கிஷம்.

நாரதர்: இது ஓர் அழகிய வாழ்க்கைச் சித்திரம்.

கலைமகள்: பெரிய கதை; முடிவுவரை ஸ்வாரஸ்யம் சிறிதும் குறையாமல் கதைப்போக்கு இருக்கிறது. எளிய தெள்ளிய மொழிபெயர்ப்பு. நல்ல பதிப்பு.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4

உலக மகாகவி ரவீந்திரநாத் டாகுர் எழுதிய அற்புதமான நூல்கள்

விசேஷ அனுமதி பெற்று (1) த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ.
வங்க மூலத்திலிருந்து
மொழி பெயர்த்தவர்கள் (2) த. நா. ஸேநாபதி

1. புயல்:—பல்லாயிரக் கணக்கான வாசகர்களாலும், அனேகமாய் எல்லாப் பத்திரிகைகளாலும் மிக மிகப் பாராட்டப்பெற்றது.
2. கோரா:—தேசபக்தி புகட்டும் ஒப்பற்ற நவீனம். குறுகிய மதப்பற்று தேச முன்னேற்றத்திற்குத் தடையாகும். பரந்த நோக்கமே சமூக ஒற்றுமைக்குச் சிறந்தது என்பதை நன்கு விளக்கிக்காட்டுவது. மிகப் பெரிய நாவல்.
3. கல்லின் வேட்கை:—(சிறு கதைகள்) ஒவ்வொரு கதையிலும் தனிச்சுவை. யௌவனத்திலிருந்து முதுமை வரை மகாகவி எழுதிய கதைகள் பல. அவற்றுள் சிறந்த ஏழு கதைகள் இதில் அடங்கியுள்ளன. தமிழ்நாட்டில் இதுவரை படித்தறியாத சிறு கதைக் கோவை இது.
4. சதுரங்கம்:—நான்கு வெவ்வேறு மனப்பான்மையுடைய மனிதரின் உள்ளக் கிளர்ச்சிகளை விவரிக்கும் அற்புத நவீனம்,
5. இளமைப் பருவம்:—எளிய நடையில் சிறுவர்க்கென் றெழுதிய சுய சரிதம்.
6. வாம்சாரி:—(நாடகம்) அதிநாகரிகக் கற்பனை.
7. இயற்கையின் வஞ்சம் (நாடகம்) 'துறவிக்குப் பாசம் உண்டோ ?' என்றால், 'உண்டு' என்பது ஆசிரியருடைய சித்தாந்தம். இதில் அதை விவரமாகக் காணலாம்,
8. பௌடாகுராணிர் ஹாட் (நவீனம்) சரித்திர ஸம்பந்தமானது.
9. கீதாஞ்சலி:—இளம் ஞாயிறின் செவ்வி வாய்ந்த இன்பக் கவிதைகள்.
10. பலி:—(சரித்திர ஸம்பந்தமான நாடகம். ஜீவ காருண்யத்தின் மேன்மையை விளக்குவது. ரவீந்திரருடைய கனவில் உருவான அற்புதக் கதை அமைப்பு. ஷேக்ஸ்பியருடைய உயர்தரத் துன்பியல் நாடகத்திற்கு ஈடாகச் சொல்லலாம்.

புதுவழி

'மனம்போன வழியே போக வேண்டாம்' என்ற முதுரை ஒன்று உண்டு. ஆனால் தம் வழியிலேயே சென்றவர்கள் தாம் வெற்றியைக் கண்டனர். முள் நிறைந்த இந்தப் புது வழியில் முன்னேறிய அதிர்ஷ்டசாலிகளில் நேதாஜி ஒருவர், என்பதை நம்மால் மறக்க முடியாது. இந்த வழியில் தென்படும் புதுமைகளை இந்நூல் வாயிலாக நமக்கு அவர் சொல்லுகிறார்.

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

—— விலை ரூ. 2—0—0 ——

அல்லயன்ஸ் கம்பெனி : : மயிலாப்பூர், சென்னை - 4



தலைவர் ஜவாஹர்

எழுதியவர்:
தி. ஜ. ர.

ரூ. 3—8—0

உள்ளுறை

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4